புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது

# இந்து சாதனம்.

## THE HINDU ORGAN.

['ரேலிபோன்' இல. 56.]

| பத்திரக் கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. | 5-00 |
| இலங்கை, இந்தியா: " ரூ. | 8-00 |
| தொலைப்பகுதி: " ரூ. | 9.00 |
| தனிப்பிரதி: | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ.10-00 |
| " | அரைக்கலம் | ரூ. 5-00 |
| " | கால்கலம் | ரூ. 3-00 |

அடுத்த முறைகட்கு வேறு விகிதங்களிற் வாசி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சா. } யாழ்ப்பாணம்;-பிரசோற்பத்திஸு கார்த்திகைமீ உடுஉ. (1931 டிசெம்பர் 10உ.) வியாழக்கிழமை. { இலக்கம்—சா௫.


கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
செம்பூத்த வியமாக மங்க வோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சொனத்தத் தினிது துங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்த விநாயகன் பூன் வணங்கிவாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## திறம் கொளுக்கி ஓடுகள்,

மோர்கன், நட்சத்திரம் 14, இஞ்சுப் பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங்கசியா. அண்டப் பார்த்தாப் போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெல னதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

விற்கும் இடங்கள்:—

யாழ்ப்பாணம்:—
மு. இராசேந்திரமூப்பர்
கிட்டங்கித்தெரு.

பரித்தித்துறை:—
மு. நமசிவாயம்
கடைத்தெரு.

ஊர்காவற்றுறை:—
கரம்பன்.

திருக்கோணமலை:—S. சின்னையா
வில் லூண்டி.

(H 12. 10-1-32.)



## பிள்ளையார் கதை.

விநாயகசஷ்டி விரதகாலத்தும் அத்தினத்திற்கு முன்னுள்ள 20 நாட்களும் விநாயக ஆலயங்களிலும் மற்றை ஆலயங்களிலும் அன்பர்களாற் படனஞ் செய்யப்படுவது; இதன்கண் விநாயகசஷ்டி விரத மகத்துவமும், இதனை அநுஷ்டித்தோர் பெற்ற பயனும், அநுஷ்டியாமல் விட்டமையால் வந்த ஆபத்தும், விரதம் அநுஷ்டிக்கவேண்டிய முறையும் இலக்கண சுத்தரிகதையும், விநாயகர் மீது படிக்க வேண்டிய தோத்திரப்பாக்களும் அடங்கியுள்ளன. இலகுவான அகவற்பாவில் இக்கதையைப் பாடியவர் வரதராசபண்டிதராவர். சுத்தமான பதிப்பு விலை சதம் 15. (அணு 2½) இச்சாதன ஆலயத்திற் பெற்றுக் கொள்ளலாம். 5 பிரதிகளுக்குக்குறைய வி. பீ. பீ. மூலம் அனுப்புதல் முடியாது. முத்திரையனுப்புவோர், பிரதிகளை அனுப்புவதற்காகிய செலவுஞ் சேர்த்து முத்திரை யனுப்புக.

வண்ணார்பண்ணை 10—12—31. } மனேஜர். சைவப்பிரகாச யந்திரசாலை.



தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள

## கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்கரம் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்கும் கம்மனியாரைத் தகுதியுடையவராக்கிப் புகழ்பெற்றது மிக இலேசானது மலிவானது. ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன்துறையிலே கவமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாள முள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு.

ஜெ. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.
(Y. 9 8 1—31 12 31.)

## உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½ (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக் கதை ரூ. 2½. (6) பழமொழிவகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும் உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ. 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகக்கியாட்லாத்
→ இனம் ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y 17. 7 9—8 9-32)

Established 1909. A. S. M. A. Khader Brothers

மருந்தேயாயினும் விருந்தோடுண், என்ற ஔவைப்பிராட்டியாருரைப்படி

இந்த விளம்பர முழுதும் தாங்களும் வாசித்து
தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசித்துக் காண்பியுங்கள்.

குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக்கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லையுயிர்க்கு. (குறள்.)

துன்பமுறுவது நம்முடிரோயாதலால் மூவகைத்தோஷத்தாலும் பிணிவாராதவழியில் தப்பாதற் காகிய நல்லவிதமாகிய அவிழ்தங்களை உண்டவர்களுக்கு பிணியால் துன்பமில்லையென திருவள்ளுவநாயனுர் கூறிய திருக்குறளைபுணர்ந்த அறிவிற்சிறந்த அன்புடையோரே அருந்தக்கடவீர்களாக.

நாதங் கெட்ட தேகத்தைக் காக்கும்; நாட்பட்டரோகத்தைப் போக்கும்.

உங்கள் பணத்திற்கும் மருந்தின் குணத்திற்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது.

சிகாற்றது! குணமுற்றது!! மகிழ்வுற்றது!!! புகழ்பெற்றது!!!!

## ஜீவானந்த தாது விர்த்தி லேகியம்.

ஓ! அன்பர்காள்!! ஒருவனுக்கு வீரியதத்தில் ஏதேனும் விகாரமுண்டாயிருக்கின் அவன் எவ்விதசந்தோஷத்திற்குரியவனுயினும் வீரியக்கெடுதலின் காரணார்த்தமாகவே அவன் மனதிற்கு மேலும் மேலும் விசனத்தைத்தான் உண்டாக்கச்செய்யுமென்பது ஆயுர்வேத சாஸ்திரங்களின் துணிபும் தவிர, இராஜாங்க வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதுவே, நபுஸகம், அல்லது பேடித்தனமென்று சொல்லப்படும் அவ்விதத்துக்ககாமான கொடிய வியாதியை அடியோடுதொலைத்து உலகின் வாழ்க்கையில் என்றங்காணுத ஆனந்த சுகாதாரவின்பத்தையடையச் செய்விப்பதில் இந்த ஜீவானந்த தாது விர்த்தி லேகியமே மிகவுஞ் சிறந்தது. இந்த லேகியத்தின் முக்கிய குணமாவது: இளமைப் பருவத்தில் பற்பல துர்ச்செய்கைகளினுல் நடுப்பிராயத்தில் தேஹபலங்குன்றி நரம்புகள் தளர்வடைந்து இரத்தம் கெட்டுப்போய் சந்தானவிர்த்தியில்லாமல் வயோதிகர்போல் மயங்கிநிற்கும் புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகி பிரமேகச்சூட்டால் நாதமானது ஜலம்போல் நீற்று, கைகாலசதி மலசிக்கல், பசியில்லாமை, ஜீரணக்குறைவு, நித்திராபங்கமென்னும்ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், மூளையின்கொதிப்பு கண்ணெரிவு, தேகஅனல் இடுப்புவலி நீர்கடுப்பு, நீரெரிச்சல், நீர்சுருக்கு முதலிய சர்வரோய்களையும், ரோய்க்குத் தக்கபடி 40, அல்லது 20 நாளில் பூரணமாய் சுகப்படுத்தி, இரத்தத்தை சுத்திசெய்து தங்கள் தங்கள் சுபாவத்திற்கு மேலான வீரியத்தையும், மனவுற்சாகத்தையும் உண்டாக்கி, இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, தேகசக்தி, சந்தானவிர்த்தி, முதலிய நலன்களைச் செய்வதில் இதுவே மேலானதென்றும் கடவுளுக்குப் பொதுவாய் உறுதியாகச் சொல்லுகின்றோம், அப்படி இதில் சுருக்கமாய் காட்டியுள்ள குணாலத்திற்கு மேற்கொண்ட பலனையடையவில்லையென்று கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின்பணத்தை உடனே வாபீஸ் செய்விக்கப்படும். அப்படி ஷை கிரயத்தை கொடுக்கத் தவறினுல் கோட்டுமூலமாக வசூல் செய்து கொள்ளலாம். மேலும் இம்மருந்தின் குணாலத்தைப்பற்றிச் சந்தேகிக்கிறவர்கள், நமது மருந்தாலயத்திற்கு நேரில்வந்து தங்கள் தங்களுக்குரிய சந்தேகத்தை போதுமானவரையுமுள்ள நிவாரணைச் செய்துகொண்டு வாங்கலாமென்பதாயும் திண்ணமாய் கூறுகின்றோம்.

40 நாள் 80 வேளை டப்பி 1க்கு கிரயம் ரூ 8 0 0
பரீட்சிக்க 20 நாள் 40வேளை டப்பி 1க்கு ரூ 4 0 0

வி பி. தபால் சார்ஜ் பிரத்தியேகம், முற்பணமனுப்பினுல் வி. பி. தபால் செலவு இனுமாய் அனுப்பப்படும். பினுங்கு, சிங்கப்பூர், சிலோன், சிறம்பான், கோலாலம்பூர் ஆகிய ஐக்கிய மலாய் நாட்டு வாசர்களும் மருந்தின்கிரயமும் தபால் செலவு ரூ 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை பிறதேசவாசர்கள் அட்வான்ஸ் அனுப்பினுல், பாக்கி தொகைக்கும் வி. பி. யில் அனுப்புவோம். ஆர்டர் செய்பவர்கள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டெழுதவும்.

Our Sole Agent:
P. M. Abdulcader Esqs,
Ceylon Post Agency
No. 105, Piachaud's Lane, Maradana,
Colombo, Ceylon.

எமது விலாசம்:
☞ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் மெடிக்கல் ஹால்
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா,
இந்தியா.

(Y. 15. 6-7-31—5-7-32.)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகறியும்படி பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, லோத்திர், கஸ்தூரி, குமாரிதரசு, சிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, கிந்தரை, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவரி, சீமைவிதை, நாகப்பூ லவங்கம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், இரும்புபஸ்பம், அயசந்த செந்தூரம் சங்கிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீர்ழிவு, [illegible], நீர்கடுப்பு, மூலக்குடு, நடுக்குத்தல் உள்ளயவிறுக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம் வகைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் ரோகங்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். யாவர் விருத்திரவரும்.

இந்த லேகியத்தின் விலை முத்தல் ஒன்றுக்கு ரூபா உ.0. அரைமுத்தலுக்கு ரூபா ௧0. கால் முத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினுங்கு முதலிய தொடு வாசிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன்பணம் கூட அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவநேசஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
சாத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
இலங்கை.

(Y.75. 31-12-31.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரசோற்பத்திஞு கார்த்திகைமீ ௨௰௪ வியாழக்கிழமை.

## ஓயாத மழையும் பாயாத வெள்ளமும்.

சென்ற இரண்டு மூன்றுதினங்களாக இங்கே மழை அடைத்துப் பெய்வதனால் வீட்டுக்கோல்லைகளிலுள்ள கிணறுகளும், குளங்கள் முதலாம் ஏனைய நீர்நிலைகளும் நிறைந்து முட்டித்ததும்ப, வயல்கள் தோட்டங்களில் வெள்ளம்பெருக, வண்ணார் பண்ணை முதலாஞ்சில பதிந்த இடங்களில் வெள்ளப்பெருக்கு அதிகப்பட்டு குடியிருக்கும் மனைகளிலும் போய்ப்புகத்தொடங்கியது. மழைதொடங்கி இன்றோடு நான்கு நாட்களாகியும் இன்னமும் வெளித்தபாடில்லை. இதனையெழுதும்போதும் மழை பெய்தபடியேயிருக்கின்றது.

யாழ்ப்பாணப்பட்டினத்திலும் வண்ணார் பண்ணைப் பகுதியிலும் வழக்கத்திற்கு மேற்பட்ட மழைபெய்யின் இந்தவிதமான வெள்ளப்பெருக்கு வருவது சகசம். இப்படிவரும் போதெல்லாம் வந்தபின் காத்தலாகிய முறையை இங்குள்ள பகிரங்கவேலைப்பகுதியாரும் எங்கள் பட்டிசனங்கப் பகுதியாரும் அநுசரிக்கின்றார்களேயல்லாமல், வருமுன் காத்தலாகிய முறையை, நாம் எத்தனை முறையெடுத்துச் சொன்னாலும் செய்கின்றார்களில்லை. சென்ற இரவு பெய்த பெருமழை காரணமாக வண்ணார்பண்ணையில் இந்துக் கல்லூரிக்கணித்தான இடங்களிலெல்லாம் வெள்ளப்பெருக்கு உண்டாகி அநேகர் குடியெழும்பவேண்டிய நிலைமையையடைய, இங்குள்ளார் பலர் இந்த ஆபத்தை அதிகாலையில் பட்டினசங்கத் தலைவருக்குச் சென்று முறையிட்டனர். பட்டினசங்கத்தலைவர் உடனே டிஸ்திறிக் என்ஜினியருக்குத் தெரிவித்து, அவரோடும் பட்டினசங்கக் காரியதரிசியோடும் பகிரங்கப்பகுதித்தெருவேலைக்காரரோடும் வந்துசேர்ந்து இடங்கள் தோறும் யாழ்ப்பாணம்-காங்கேயன் துறைத்தெருவை வெட்டிப்பிளந்து, பெருகிய வெள்ளத்தைக் கடலுக்குட்போய் விழும்படி செய்கின்றனர். ஆபத்தான இந்த நேரத்தில் பட்டினசங்கத் தலைவரும் பகிரங்கவேலைப்பகுதியாரும் இப்படித் தம் கடமை செய்வதையிட்டு நாம் அவர்களை மெச்சி நன்றி கூறுகின்றோம். இங்ஙனஞ் செய்தலை விடுத்து,

> "வெள்ளம்
> வருவதற்கு முன்னர் அணைகோலிவைபார
> பெருகுதற்கண் என்செய்வார் பேசு"

என்ற முறையை அநுசரித்து இப்பட்டினத்தில் மழைக்காலங்களில் வெள்ளம் பெருகும் போது அவ்வெள்ளப்பெருக்கால் இங்குக் குடியிருப்போர்க்கு எவ்வகையான அனர்த்தமும் வாராத மார்க்கங்களைப் பகிரங்கப்பகுதியாரும் பட்டினசங்கத்தாரும் ஆராய்ந்தும் அநுபவத்தைக்கொண்டுஞ் செய்தல் நன்றாம். வடமாகாணத்தின் தலைப்பட்டினமாகிய இந்த யாழ்ப்பாணப்பட்டினம் கொழும்போடு மாத்திரமல்ல, கண்டி, காலி, வதுளை முதலாம் பட்டினங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போதும் மிகவும் குறைந்ததாகக் காணப்படுகின்றதென இங்கு புதியாராய் வருவோர் சொல்லக் கேட்டிருக்கின்றோம். அவர்கள் சொல்லுவது தவறல்ல. இப்பட்டினத்தின் சுகாதாரநிலை பெரிதும் அலட்சியஞ்செய்யப்படுகின்றது இங்குள்ள தெருவீதிக் கான்களும் ஒழுங்கைகளும் பெரும்பான்மையும் மலமூத்திரம் கலவோடு போத்தலோடு குப்பை பற்றை நாய் காக்கை பூனை முதலியவற்றின்பிணங்கள்என்புமீன்முள்ளு மழைக்காலத்திற்சேறு நிலையான வெள்ளம் கற்குவியல் இலைதழைமுள்ளுக்கோப்பு முதலியவற்றோடுகாணப்படுகின்றன. கான்களுட்பல நிரவுண்டும் மதகுகள் கண்கெட்டும் வாய்க்கால்கள் மூடுண்டுங் கிடக்கக்காணப்படுகின்றன. நிரவுண்ட கான்களும் கண்ணழிந்த மதகுகளும் மூடுண்டவாய்க்கால்களும் பெருமழையால் வெள்ளப்பெருக்குண்டாகுங் காலங்களில் வெள்ளத்தை ஏற்பதும் ஏற்று வெளியே விடுவதும் எப்படிமுடியும்! மழைபெய்யும் வெள்ளப்பெருக்கு உண்டாகும் தாழ்ந்த நிலத்தி[ல்] குடியிருப்பார்க்கு இதனாற் சங்கடம் நேருமென்ற இவைகளை முந்தியே உத்தேசித்தல்லவா நமது பகிரங்கப்பகுதியாரும் பட்டினசங்கத்தாரும் இக்கான்களையும் வாய்க்கால்களையும் மதகுகளையும் சீர்ப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

இனி, இப்பட்டினத்துள்ள ஒழுங்கைகளின் நிலைமையே மிகப் பரிதாபமானதெனலாம். இருபுறத்துமுள்ள வளவுகள் வருடா வருடம் வேலியடைக்கப்படும் பொழுது விரிந்து விரிந்துவர ஒழுங்கைகள் ஒடுங்கியொடுங்கி வரலாயின; இந்த ஒழுங்கைகளால், தெருவீதிகள்போல் மோட்டோரதங்கள் பெரிதுஞ் சஞ்சரிப்பதனால், ஒழுங்கைகளெல்லாம் குழிகளும் பள்ளங்களும் புழுதியும் விரவ, மழைக்காலத்தில் வெள்ளம் சகதியென்னும் இவை மிகுந்து எவரும் நடந்து செல்லமுடியாமற் கிடக்கக்காணப்படுகின்றன. இச்சகதியோடு நாம் முன் சொன்ன மலமும் கலவோடு பீங்கானோடு முட்கோட்டு குப்பை முதலியனவுஞ் சேர்ந்திருக்கும்போது இவ்வொழுங்கைகளின் நிலைமை என்னவாகுமென்பதை எவரும் யூகித்தறியலாமே. பட்டின எல்லையிலுள்ள ஒழுங்கைகளைக்காட்டிலும் கிராமச்சங்கங்களின் பரிபாலனத்திலுள்ள ஒழுங்கைகள் நன்னிலைமையிற் காணப்படுகின்றனவே. இனி இந்த ஒழுங்கை விஷயத்தில் அயலிற் குடியிருப்பவர்களாகிய பட்டினவாசிகளின் அலட்சியமும் வெறுக்கத்தக்கனவாம். ஒழுங்கைகள் வாயிலாக மோட்டர் வண்டி வைத்து ஓடுபவர்களுட் பலர் அந்த ஒழுங்கைகளில் வசிப்பவர்களேயாவர். இவர்கள் தாம் செய்யும் வசதியீனத்தைத் தாம் நீக்கிவிடவேண்டுமென்று கனவிலும் நினைப்பதில்லை, ஒழுங்கைகளின் ஓரங்களிற் குடியிருப்பவர்களுட் பலர் தம் வீட்டுக் கோல்லையிலுள்ள குப்பைகளைக்கொண்டுவந்து ஒழுங்கையிற் கொட்டுதல், மல சலங் கழித்தல் முதலிய கேடுதிகளைச் செய்கின்றார்கள். இவைகள் கண்டிக்கத்தக்கன. ஒழுங்கைகளைத் துப்பரவாயும் சஞ்சாரத்திற்கு வசதியாயும் வைத்திருக்கும் விஷயத்தில் பட்டினசங்கத்தார் பட்டினவாசிகள் என்னும் இருபாலாரும் ஒத்துழைத்தல் வேண்டும். ஏனையதெருக்கள் கான்கள் வாய்க்கால்கள் மதவுகள் விஷயத்தில் பட்டின சங்கத்தாரும் பகிரங்கவேலைப்பகுதியாரும் முந்தியே யோசித்து ஒத்துழைத்துமழைக்காலத்தில் வெள்ளப்பெருக்காற் சனங்கட்கு நேரக்கூடிய அனர்த்தங்களைத் தடுத்தற்கான வழிகளைச் செய்வார்களாக.

---

## "பலநாட் கள்வன் ஒருநாள் அகப்படுவான்."

மாங்குளப் புகைரதஸ்தான அதிபரும் அவருடைய உதவி யுத்தியோகத்தரும் சென்ற நவம்பர்மீ 23உ திங்கட்கிழமை யிரவு தம் கடமையினின்றுந் தவறிய சமாசாரத்தை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம். இந்த இரு உத்தியோகத்தர்களும் அரசினரிடம் கொழுத்த சம்பளம் பெற்றுக்கொண்டு தம கடமையைப் பாராது, தம் பொறுப்பு எப்படிப்பட்டதென்பதையும் மறந்து உண்டாட்டுக் களியாட்டுச் செய்தற்கும் வேட்டைக்குஞ் சென்றமை பெரிதுங் கண்டிக்கத் தக்கதாம். இலங்கைப் புகைரதப்பகுதியில் இந்தவிதமான சம்பவம் இதற்கு முன்னர் எக்காலத்தாயினும் நடந்ததில்லையெனலாம். இவ்விஷயத்தில் இன்னும் ஒரு ஆசங்கை ஏற்படுகின்றது. அஃதென்னையெனில் மாங்குளஸ்தானத்திலுள்ள உத்தியோகத்தர் இருவரும் குறித்த தினத்தன்று பின்னேரமே வேட்டை மார்க்கஞ் சென்றுவிட்டனரென்று சொல்லப்படுகின்றது. அப்படியானால் பரந்தனிலிருந்து குறித்த புகைரதத்தொடர் மாங்குளத்திற்கு வரலாமென்று பரந்தன் புகைரதஸ்தான அதிபருக்கு அநுமதிகொடுத்தது யாரென்பது தெரியவில்லையே. ஆனைபிறவுக்கப்பால் வன்னிக் காட்டிலுள்ள புகைரதஸ்தானங்களில், மாங்குளத்தில் இப்பொழுது நடந்துள்ளதுபோன்ற பெரும் பிழைகள் நடவாவிட்டாலும், இடையிடையே பல அக்கிரமங்கள் நடப்பதாகப் பிரயாணிகள் முறைப்பட்டுள்ளனர். புகைரதப் பகுதித் தலைவர், புகைரதப் பகுதி யோசனைச் சங்கத்தார் இந்த வன்னிப் பகுதியிலிருக்கும் புகைரதஸ்தானபதிகளும் ஏனைய உத்தியோகத்தரும் நடத்தும "தன்னரசுமுறை"யை நன்கு ஆராய்ந்து தக்கபடி அவர்களைக் கண்டித்துத் திருத்துதல் வேண்டும் இல்லையேல் இது புகைரதப் பிரயாணிகட்கு ஆபத்தைத் தரத்தக்கதாம்.

---

## உலகம் பலவிதம்.

"என் துரையே, நான் பெண்புத்தியினால் அறியாமற் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள்; இனிமேல் இப்படியான தவறு ஒன்றுஞ் செய்யமாட்டேன்; இதுவே முதன்முறையும் கடைசிமுறையுமாகட்டும்; அல்லாமலும் இந்தக் காலத்தில் தங்கள் கற்புக்குப் பங்கமானதும் நாயகனுக்குத் துரோகமானதும் நிராவசையை, புகுந்த வீட்டிற்கும் பிறந்த வீட்டிற்கும் தாழ்த் தக்கதுமான பிழைகளைச் சில மூடப் பெண்கள் செய்ய அவற்றையும் புருஷன்மாராயுள்ளவர்கள் பொறுத்துக்கொள்ளுகிறார்கள்; நான் அப்படியொன்றுஞ் செய்யவில்லையே, செய்யப்போவதுமில்லையே; நான் எதிர் வார்த்தை பேசிவிட்டேன் என்று என்னோடு பிணக்குற்று இன்று இரண்டு நாட்களாய் அன்னாகாரமுண்ணாமல், வைராஞ் சாதிக்கின்றீர்களே; நான் அறியாமையினால் ஒருதவறைச் செய்தாலும் என்னைக் கண்டித்துத் திருத்தவேண்டிய கடமை உங்களையல்லவாபொறுந்தது; "நல்லமாட்டுக்கு ஒரு சூடு நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை" என்றபடி நான் செய்த பிழையின் பயனை ஒருமுறை அநுபவத்திற் கண்ட நான் இனியும் பிழை செய்யக் கனவிலாயினும் நினைப்பேனா" என்று மீனாட்சியம்மாள் தன்நாயகனாகிய சோமசுந்தரனைப் பலமுறையும் இரந்தாள்.

* * *

"மீனாட்சி, நீ வீணாக என்னோடு நியாயம் பேசாதே; கறந்தபால் முலைக்கேறப் போவதில்லை; என் குணந் தெரிந்து அதற்கு இசைய நடந்துகொள் என்று உனக்கு எத்தனைமுறை முன்னருஞ் சொல்லியிருக்கிறேன்; உனக்கு நான் சொல்லும் புத்தியெல்லாம் புறக்குடத்து வார்த்த நீர்போலாகின்றன; நீ படித்த படிப்பில், "பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்" என்ற முதுமொழியை மாத்திரம் விட்டுப் படித்தாயா; நீ இன்னமுஞ் சின்னவளா; எதிர்க்கெதிர் வாய்காட்டும் பெண்ணோடு இருந்து வாழ்வதிலும் பரதேசம் போய்விடுவது நல்லது; உன்னோடு எனக்கு அதிகம் பேச்சென்ன; நான் ஒருபோதும் உன் கையால் அன்னம் வாங்கி உண்ணப்போவதுமில்லை; இங்கு இருக்கப்போவதுமில்லை; உனக்கு வேண்டிய பொருள் இருக்கிறது; என் வீடுவாசல் இருக்கிறது; வேலைக்காரர் இருக்கிறார்கள்; உன் க்ஷேமத்தைப் பார்க்க உன் அண்ணன் இருக்கிறான்; ஆனதால் உனக்கு வருங் குறை யாதுமில்லை; என் பொருளை அநுபவித்துக்கொண்டு நீ மகிமையாய் இருந்துகொள்; 'சற்றேனும் ஏறுமாறாக நடப்பாளேயாமாகில் கூறாமற் சந்நியாசங்கொள்' என்று முன்னோர் அறியாமற் சொன்னார்களா; இருவர் வாழ்க்கையும் 'இவ்வளவு காலமுந்தான்' என்று எண்ணிக்கொண்டிரு; நான் செத்தால் நீயும் உடன்கட்டை ஏறிவிடுவதா; அந்த வழக்கந்தான் இந்தக்காலத்தில் இல்லையே" என்று மிக்க ஆத்திரத்தோடும கவலையோடும் சோமசுந்தரன் கூறினான். இப்படித் தன் நாயகன் பேசக்கேட்ட மீனாட்சியம்மாள் பெரிதும் மனங்கலங்கி ஏக்கங் கொண்டவளாய், கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வடிய அழுதுகொண்டு, "இனி ஒருபோதும் இப்படித் தவறு செய்யமாட்டேன் என்று நான் இரந்து கேட்கவும் நீங்கள் என்னோடு முனனொரு போதுமில்லாத வர்மஞ் சாதிக்கிறீர்களே; நீங்கள்ஏன்வீட்டைவிட்டு, ஊர்தேசத்தை விட்டுப் பரதேசம் போவான்; நீங்கள் வெளியே போகச் சொன்னால், நான் போய் என் அண்ணனுடன் இருக்கிறேன் ......" என்று மீனாட்சி சொல்லி முடிப்பதற்கிடையிற் சோமசுந்தரன் "அடி பார்த்தாயா, உன் உள்ள குணத்தைக் காட்டிவிட்டாய்; அண்ணன் இருக்கிறான் உன் இனத்தவர் இருக்கிறார்கள்; உன்னைப் பாதுகாப்பார்கள் என்று நினைத்துத்தான் இப்படி என்னைமதியாமல் நடக்கிறாய்; அது நல்லது உன்னுடன் என்னத்திற்கு வீண்பேச்சு, பேசபேச எனக்குக் கோபம் மூளும், தீராக்கோபம் போராய் முடியும் என்பார்கள்; நான் செய்யவேண்டியது எனக்குத் தெரியும்" என்று சொல்லிவிட்டு வெளி விறுந்தையிலிருந்த சோமசுந்தரன் சரேலென்று எழுந்து வீட்டுட்போய்ச் சில பொருட்களையும் எடுத்துக்கொண்டு, மீனாட்சி அழுது இரந்து தடுக்கவும் அவளை உதறிவிட்டு வெளியே போனான்; போகும்போது இரவு 10மணியிருக்கும். (வரும்.)

---

## கால நிலை.

சென்ற இரண்டு மூன்று நாட்களாக இங்கே பெருமழை பெய்கின்றது. இதனாற் கிணறு குளங்களும் ஏனைய நீர்நிலைகளும் நீர்பெருக்குடன் காணப்படுகின்றன. கிணறுகளில் தண்ணீர் மொள்ளுவோர் மிகவும் அவதானமாக விருத்தல் வேண்டும்.

---

## வோட்மோட்டர் பிரதிகர்த்தர்.

மாத்தளையிலே பிரபல தோட்ட முதலாளியாகவும் சமாதான நீதவானுமாயிருந்து காலஞ்சென்ற மிஸ்டர் டானியல் ஜோசேப் அவர்களின் மகன் மிஸ்டர் எவ். எச். பி. ஜோசேப் அவர்கள் யாழ்ப்பாணத்திலே ஸ்திரமாக வசித்தற்கு வந்திருக்கின்றனர். இவருடைய வியாபார விளம்பரம் இற்றைப்பிரசுரத்தில வேறு இடத்தில் பிரசுரம் பெறுகின்றது.

## எழாலையிற் கலகம்.

சென்ற வாரத்தில் எழாலை யென்னுமிடத்திலுள்ள வண்ணாவகுப்பார் சிலர் எழாலை கிழக்கு வெள்ளாளரில் ஒருபகுதியாரைத் துணைக்கொண்டு எழாலைதெற்கிலுள்ள வேளாளரின் செய்பயிர், வாழை முதலிய பொருட்களை அழித்தும், கலகங்கள் விளைத்தும் பெரிதும் இடர்ப்படுத்தியதாகவும், பொலிசார்மீது கற்பிரயோகஞ் செய்ததுமன்றி, பொலிசார் முன்னிலையிலேயே அபாயமான காயங்களை வருவித்தனரெனவும் அறிந்த பொலிஸ் தலைவர் தமது பரிவாரங்களுடன்வந்து கலகத்தையடக்கிச் சிலரைக்கைதிசெய்தனர். பலர் ஓடி ஒளித்துக்கொண்டனர். கைதியாகப் பெற்றோர் விளக்கக்சிறையி லிருக்கின்றனர் ஏனையோரை அகப்படுத்த முயற்சிகள் செய்வதாக அறிகின்றேம்.

---

## திருத்திக் கோள்க.

சென்ற திங்கட்கிழமை (17-12-31) இந்துசாதனப் பிரசுரத்தில், பட்டினபரிபாலனசங்கப் பிரதிநிதித் தெரிவுவிஷயமாக 1-ம் வட்டாரத்திற்கு ஸ்ரீ T. R. நல்லையா என்றிருப்பதை R. R. நல்லையா என்று திருத்திக் கொள்க. ஸ்ரீ T. R. நல்லையா அவர்களின் தம்பியாரே R. R. நல்லையாஅவர்களாம்.

---

## தந்திச் செய்தி.

### மஹாத்மா காந்தி.

பாரிஸ் 5–12–1931.

இன்று சாயந்தரம் 4 மணிக்கு காந்திஜி பிரான்ஸ் தேசத்திலே 'காரே டு நோட்' என்னும் இடத்தில் வந்து இறங்கினர். இங்குள்ள இந்தியக் கூட்டத்தார் அவரை வரவேற்றனர். பெருந் தொகையான சனக்கூட்டத்திற் கிடையே அவர் பொலிஸ் பகுதித் தலைவருடன் கை கோர்த்துக்கொண்டு நடந்து சென்றனர். ஒரு கூட்டம் பொலிஸ் வீரர்கள் மெய் காப்பாளர்களாகச் சென்றனர். பெருந் தொகையான படம் பிடிக்கும் கருவிகள் அவர்மீது சேர்முகமாக்கப்பட்டன. அதன்பின் 'செயின்ற் லாஸறே' என்னும் இடத்திலுள்ள 'ஹொட்டல் ரேர்மினஸ்' என்னும் விடுதிச் சாலைக்குச் சென்றனர். அங்கு இந்தியக் கூட்டத்தார் அவருக்கு வரவேற்பு நடத்தினர். அநேக இந்தியர்கள் அவரைப் புகழ்ந்து பிரசங்கம் செய்தனர். மஹாத்மா சுருக்கமாக மறுமொழியளித்தனர். பின்னர் இந்து ஆசீர்வாத கீதம் பாடப்பட்டது. பின் மஹாத்மா ஒரு பதிந்தஆசனத்தில் உட்கார்ந்து தனது மடியில் கொஞ்ச ரோஸா புஷ்பங்களையும், ஐஸ்வரியத்தின் குறியீடாக ஒரு பழத்தையும் கையில் வைத்து[க்] கொண்டிருக்க, சினிமாப்பட நாடாவில் அவரைப் படம் பிடித்தனர். ஒலி பரப்புங் கருவியில் மஹாத்மா சில வார்த்தைகள் பேசினர். பாரிஸ் நகரத்தில் தாம் வந்தது மனச் சந்தோஷத்தைக் கொடுக்கின்றதென்றனர். பின்னர் பெரும் கல்விமானும் அறிஞனுமாகும் 'ரோமேயின் ரோலண்ட்' அவர்களின் சகோதரி 'மடேம் மைடலீ'யின் கிரகத்தில் சில நண்பர்களை வரவேற்று அன்றிரவு அங்கே தங்கினர். ஜெனிவாவிலுள்ள சில புதினப் பத்திரிகைகள் தாம், இந்தியர்களுடைய விருப்பங்கள் நிறைவேறாவிடின் வலாற்கார இயக்கத்தைத் தொடங்குவதாக எழுதிப் பரப்பியுள்ளன. அதை அடியோடுமறுத்தனர். தன்னளவில், வலாற்காரத்தைத் தடுப்பதற்குத் தாம் தமது உயிரையும் பலி கொடுக்கச் சித்தமுடையரா யிருக்கின்றனரென்றனர். முதன் மந்திரியாரின் விஞ்ஞாபனத்தைப்பற்றிய அபிப்பிராயம் கேட்கப்பட்டபோது, இந்தியத் தேசிய மஹாநாட்டின் தீர்மானத்தையே தாம் பூர்த்தி கேட்டல் வேண்டுமென்றும், இந்தியர்கள் அவசரப்பட்டு எம்முடிவும் செய்துகொள்ளலாகாதென அவர்களுக்குத் தாம் கூறுவதாகவும் சொன்னார்.

---

பாரிஸ் 6–12–31.

இன்று காலை 8–5க்கு காந்திஜி 'மொன்றூ' என்னும் இடத்திற்குப் பிரயாணமானார்.

['மொன்றூ' என்னுமிடம் 'சுவிற்ஸர்லண்ட்' நாட்டிலுள்ளது. ப–ர்.]

இந்த இடத்திலுள்ள, 'வில்லெனூவ்' என்னும் சிறு பட்டணத்திலுள்ள 'வில்லா லொனெற்' என்னும் வீட்டிலேயே ரோமேயின் ரோலண்ட் வசிக்கின்றனர், இந்த இடத்திலேயே ஆங்கிலக்கவியான லோட்பைறன் தனது அரிய பாவினங்களுக்கு அருட் புலமையும் பிரபோதமும் பெற்ற இடமாகும். ஐரோப்பாக் கண்டத்திலேயுள்ள வாவிகளுள் மிக அலங்காரமான ஜெனிவாவாவி இங்குள்ளது. இதன் கரையோரத்திலேயே குறித்த வீடு இருக்கின்றது. புகைரதத்தைவிட்டு மஹாத்மா எந்த ஸ்தானத்தில் இறங்குவதென்பது வெளிப்படுத்தப்படவில்லை. ஏனெனில் சனக்கூட்டம் அதிகப்படுமெனப் பயந்தேயாம்.

திங்கட்கிழமை மஹாத்மா மௌன விரதத்தை அங்கு கழித்து, செவ்வாயன்று அகில அரசாட்சிச் சங்கக் காரியாலயத்தையுந் தரிசிப்பரென எண்ணப்படுகின்றது. இவ்விடத்திற்கு மஹாத்மா புகையிரதத்தில் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்தனர்.

பாரிஸ் நகரத்தைவிட்டுப் புறப்படுமுன், புத்தர் மாதிரி ஒரு மேசையின்மீது உட்கார்ந்துகொண்டு 2000 சனங்கள் அடங்கிய ஒரு கூட்டத்தில் பேசினர்; இந்தியாவிலே சுய ஆட்சி இயக்கம் சத்தியத்தையும் சாத்வீகத்தையும்

தொடர்ச்சி 5-ம்பக்கம்

## சைவ மகிமை.

[ச. சச்சிதானந்தம் பிள்ளை.]

(முற்றொடர்.)

இனி 'உருத்திராக்க'மென்பது 'ருத்ரம்' 'அக்ஷ' என்னும் இரண்டு சொற்களாலாயது. அதன் வரலாறு சீவிரறிக்ததே. அதுவுஞ் சிவசம்பந்த முடையது. திருநீற்றிற் குள்ளதுபோலவே இதற்கும் மகிமையுண்டு.

சிவமந்திரமாவது மறக்கக்கூடாததோர் தெய்வவொலியென்று சுந்தரமூர்த்தி நாயனுர் 'நற்றவா வுன்னை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே" என்னும் அரியமொழிகளால் அறிவுறுத்தியருளினர். இம்மந்திரம் வேத இதயத்துள்ளது. சைவர்க்கு இது இன்றியமையாதது. 'மந்திரம்' என்னும் கிளவி, நினைப்பவனைக் காப்பது என்னும் பொருளுடையது. இச்சிவ மந்திரத்தைத் தூலம், சூக்குமம் காரணம் என்று நூல்கள் பிரிப்பினும் அவையெல்லாம் உண்மையில் ஒரே பயனுள்ளவையே. ஆகமக்காரர் இதில் பதி பசு பாச லக்ஷணங் கூறமுற்படுவர். எனக்கு இதில் தடையில்லை. இம்மந்திரம் செபிப்போர் பிறமந்திர மெதையும் கையாளார். பின்னர்க காரணங் காட்டுவல். எனது கோட்பாட்டை,

"மடமோட்டும் கருணைதனை மறவேன்
  செஞ்சன வனவுமாற் குர்ணாலைத்
தொடமாட்டே னவருரைக்கு முரைகேனே
  னனியாயத் தொடக்கர் கோட்குட்
படமாட்டே னருள்சாந்த விஞ்ஞவொரு
  மொழிப்பயனிற் படரு கேக்கம்
விடமாட்டே னினிதவித்தி யெனஅருட்
  பிரமமென விளங்கெம் மானே"

என்னும் பாட்டுணர்த்தும்.

ஆசாரிய சுவாமிகள் நால்வரும் ஒரே தெய்வ உபாசகர் என்பதைச் சைவர்கள் கருத்தூன்றிப் பார்க்க வேண்டும். பின்வரும் எடுத்துக் காட்டுகளைக் கருதுக:

"கருமா னுரியாடைக்
  கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லால்
  பேணா தவ்வமே" —(சம்பந்தர்)

"சென நாம் சிறுதெய்வம்
  சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே
  சேரப் பெற்றோம்" —(அப்பர்)

"மறிசே ரங்கையனே
  மழபாடியுண் மாணிக்கமே
அறிவே உன்னையல்லால்
  இனியாரை நினைக்கேனே" —(சுந்தரர்)

"கோவ்வேன் புரந்தான் மாலயன்
  வாழ்வு குடிகெடினும்
நவ்வேன் நினதடியா ரொடல்லால்
  நரகம் புகினும்
என்னேன் திருவரு ளாலே
  இருக்கப்பெறி னிறைவா
உன்னேன் பிறதெய்வ முன்னையல்லா
  தெங்க ளுத்தமனே" —(மணிவாசகர்)

இவ்வனமே அருணகிரிநாதரும்,

"படிக்கின் றிலைபழ நித்திரு
  நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென்
  கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த
  மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச
  மேது நமக்கினியே"

என்று முடிவாகக் கூறுகின்றார். இன்னன பல. * இக்கிலை வடமொழி மறைக்கும் சம்மதமானது.

உதாரணம்:

(அ) "சிவ ஏகோத்யேயச்
  சிவங்கரஸ் ஸர்வமந்யத் பரித்யஜ்ய"
—(அதர்வசிகை)

[பொருள்: 'அந்நியமான யாவையும் விட்டு, சிவமெனும் பெற்றியால் மங்களத்தைச் செய்யும் சிவனையே தியானிக்க வேண்டும்.]

(ஆ) "தஸ்மாத் ஸர்வாந் பரித்யஜ்யத் யேயாந்
  விஷ்ணவாதி கார்ஸ்வாந்
  சிவவவ ஸதாத்யேயஸ் ஸர்வ
  ஸம்ஸார மோசக:"
—(சாபோபநிஷத்)

[பொருள்: ஸம்ஸார துக்காச முத்திப் பிராப்தியின் பொருட்டு விஷ்ணு முதலிய ஸர்வ தேவர்களையும் விட்டு எஞ்ஞான்றும் தியேயனாவுள்ள சிவனையே தியானிக்க வேண்டும். —(தொடரும்.)

"சித்தாந்தம்."

* ["உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன், பின்னையொருவரை யான் பின் செல்லேன் — பன்னிருகைக், கோலப்பாவானே கொடியவினை தீர்த்தருளாய், வேலப்பா செந்தில் வாழ்வே." என்னும் நக்கீரர்வாக்கும் இவகை நோக்கத்தக்கது. (இந்து சாதனப்பத்திராசிரியர்.)]

## கிரயங்குறைந்த புகைரதப் பிரயாணச்சீட்டு.

இலங்கைப் புகையிரதப் பகுதியார் நத்தார் புதுவருஷ காலங்களிற் பிரயாணஞ் செய்வோரின் வசதியை உத்தேசித்து வழக்கம் போல் கிரயங்குறைந்த பிரயாணச் சீட்டுக்களை உதவுவர். இச்சீட்டுக்கள் 50மைல் தூரத்திற்கும் அதற்கு மேற்பட்ட தூரத்திற்குமிடையேயுள்ளஸ்தானங்கட்கேஉதவப்படும். இம் மலிவான பிரயாணச் சீட்டுகள் நிகழும் டிசெம்பர்மீ 29வ தொடக்கம் ஜனவரிமீ 3வ வரையில் புகைரதஸ்தானங்களில் உதவப்படும்; இவைகள் ஜனவரிமீ 9வ முடியும் வரையும் செல்லத்தக்கன.

இலங்கை இந்திய புகைரதத் தொடரில் நிகழும் டிசெம்பர்மீ 11வதொடக்கம் ஜனவரிமீ 31வ முடிய கிரயங்குறைந்த பிரயாணச்சீட்டுகள் உதவப்படும் இவை ஜனவரி மாசம் 15வ முடியும்வரை செல்லத்தக்கன. இச் சீட்டுகள் மன்னார்ப்பாலம் வரையில், போதற்காகிய செலவோடு போய்வருதற்கும் அப்பால் இந்திய புகைரதத்தில் போதற்காகிய செலவுடன் மூன்றில் ஒருபங்குஞ் சேர்த்துக் கிரயம் விதிக்கப்பட்டுள்ளன. இவ்விஷயமாக புகைரதப்பகுதியார் வெளியிட்ட விளம்பரத்தை பிறிதோரிடத்தில் காண்க.

### போலிஸ் வரிகொடுக்க மறுத்தல்.

பாணந்துறையைச் சேர்ந்த எக்கொட-ஊயன கந்துக்குரன்டாஎன்னுங் கிராமங்களிற் கலகஞ் சண்டை முதலிய குற்றங்கள் அதிகப் படுவதைக் கண்டு, சமையோசிதமாக, சென்ற பிவ்வரி மாசத் தொடக்கம் 6-மாசத்திற்கு அரசினர் பொலிசாரை அங்கே நிறுவினர். இதனால் அரசினருக்கு வந்த செலவு 5412ரூ. 67சதமாகும் இந்தப் பணத்தைக் குறித்த கிராமவாசிகள் 18 வயசிற்கு மேற்பட்ட ஆண்களெல்லாரும் விகிதமிட்டுக் கொடுக்க வேண்டுமென்பது பிரமாணம். ஆனால் 1000பேர் வரையில் ஒற்றுமை கொண்டு இவ்வரியைக் கொடுக்க மறுக்க குறித்த மாகாணத்தலைவர் இவர்கள்மீது வழக்குத் தொடர்ந்து அறவிடும்படி பொலிஸ் பகுதிக்குத் தெரிவிக்க அவர்கள் பாணந்துறைக் கோட்டில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். அந்தப் பொலிஸ் கோட்டு நீதிபதியாகிய ஸ்ரீ P. வைத்தியலிங்கமவர்கள் 1000பேரையும் ஒருங்கு ஏற்றி விசாரணை செய்ய முடியாமையினால் நூற்றுக் கணக்கானோரை ஒவ்வொரு தவணைக்குங் கூப்பிட்டு விசாரணை செய்கின்றனர். இவர்களுள் 12பேர் மாத்திரம் வரிப்பணம் இறுத்தனர்.

அதனுற் சேர்ந்த தொகை 84ரூபா ஏனையோருக்கு, குறித்த ஒரு தவணையுட் பணமிறுக்க வேண்டுமென்று அநுமதி கொடுத்திருக்கின்றார். ஆனால் அவர்களுக்கு வரியிறுக்கும் நோக்கமில்லையாம் இதற்கிடையில் இத்தவிஷயமாக அரசாங்க சபையில் மிஸ்ரர் W. A. de. சில்வா என்னும் அங்கத்தவர் பேசுவாரென அறியலானோம்.

### அது மெய்தான்.

சென்ற திங்கட்கிழமைப் பிரசுரத்தில், மாங்குளப் புகைரதஸ்தானத்தில், புகைரதம் சென்றவிடத்தில், புகைரதஸ்தானத் தலைவர்; உதவி உத்தியோகத்தர் இருவருமில்லாமையினால் புகைரதம் 1 மணித்தியாலம் வரையில் தாமதித்து, பின்னர் ஒருவாறு ஸ்தானத்தைவிட்டு அப்பாற் சென்றதென்பதை வெளியிட்டிருந்தோம். அதைப்பற்றிய சில விபரங்கள் இப்பொழுது எமக்கு எட்டலாயின. குறித்த தினத்தன்று புகைரதம் பரந்தன் ஸ்தானத்திலிருந்து இரவு 9 மணி 30 நிமிஷம் வரையில் வழக்கம்போற் புறப்பட்டுச் சென்று மாங்குள ஸ்தானத்தை யடைந்தபோது, அங்கே குறித்த இரு உத்தியோகத்தருமில்லாமையினாலே புகைரதப்பகுதிக் காவலனொருவன் சைகை காட்டிப் புகைரதத்தை ஸ்தானத்தில் வந்து நிற்கச் செய்தானும். பரந்தனிற்பெற்ற "அநுமதித்தகடு" (Tablet) வாங்குவதற்கேனும், புகைரதத்தை அப்பாற் செல்லவிடுதற்கேனும் அங்கே அதிகாரமுடையவர் ஒருவரும் அந்த நேரத்தில் இல்லையாம். அந்தப் புகைவண்டியிற் பிரயாணியாகவிருந்த புகைரதப்பகுதிஉத்தியோகத்தரொருவர் உடனே இச்செய்தியை அநுராசபுரத்து புகைரதப்பகுதிச் சுப்பிறின்றான்ருக்குத் தெரிவிக்க, அவர் பெரிதும் யோசித்துச் செய்வதின்னதென்றறியாது மயங்க, இதற்கிடையில் புகைவண்டியில் ஒரு ஸ்டேஷன் மாஸ்ரர் பிரயாணியாக வந்திருக்கின்றாரென்று மாங்குளத்திலிருந்து பின்னரும் அவருக்குத் தெரிவிக்க, சுப்பிறின்ரென்டன் [illegible] போன் மூலமாக அந்த உத்தியோக[illegible]ருக்கு உத்[illegible] கொடுக்க, குறித்த உ[illegible] யோகத்தர் [illegible] ஸ்தானத்திலிருந்[illegible]

கடமைபார்த்துப் புகைரதத்தை அப்பாற் செல்லவிடுத்தாராம். வேட்டையாட அன்று பின்னேரம் புறப்பட்டுக் காட்டிற்குச் சென்றிருந்த மாங்குள ஸ்தான அதிபரும் அவருடைய உதவியுத்தியோகத்தரும் கானகத்தில் வழிதப்பி அலைந்து அடுத்தநாட் காலை மாங்குளப் புகைரதஸ்தானத்தை யடைந்தனராம்.

## நூல்களைப்பற்றிய குறிப்பு.

கான வித்தியாப்பிரகாசினி:— இது ஓர் மாதாந்த தமிழ்ப்பத்திரிகை. எமக்கனுப்பப்பட்ட பிரதி இப்பத்திரிகையில் 1-ம் மலரின் 2-ம் இதழேயாகும், இச் சஞ்சிகையில் அநேக பொதுவிஷயங்களும், கற்புடை சரித்திரங்களும், நூலாராய்ச்சிகளும், சேமநட விஷயங்களும் பெண்களுக்குரிய நீதிகளும் போதனைகளும் இவைகளெல்லாவற்றிற்கும் விசேடமாக இப்பத்திரிகையின் பெயருக்கேற்ப சங்கீத சாஸ்திர விஷயமும் நன்கு நல்லாசிரியர்களால் எடுத்தாளப்பட்டிருக்கின்றது. இச்சஞ்சிகையின் தனிப்பிரதியின் விலை அணு 2 ஆகும். வருடசந்தா ரூபா1-8அணு இது ஸ்ரீ வைகுண்டம், ஸ்ரீ கானவித்தியா அச்சுச்சாலையில் பதிக்கப்பெறது ஸ்ரீ V. S. பார்த்தசாரதி ஐயங்கார் அவர்களினுற் பிரசுரம் பெறுவது இதன் ஆசிரியர் ஸ்ரீ அனந்தகிருஷ்ணன் பீ. ஏ. அவர்களாகும்.

நீ மயங்குவதேன்? — இத்தலைநாமத்தைக் கொண்ட ஒரு சிறு நூல், 'அகவெழுச்சி நூற்கள்' என்னும் பொதுவரிசையில் முதலாம் பிரசுரமாக ஸ்ரீ கோ. நடேசையர் (முன் சட்டசபை அங்கத்தவர்) அவர்களால் எழுதப்பெற்று, ஹற்றன் என்னும் இடத்திலேயுள்ள 'சகோதரி பிரஸ்' என்னும் அச்சுச்சாலையில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது இதனகண் தற்காலம் மதாழிலின்மைக்காரணமாகச் சோம்பித்திரியும் கற்றவர்களும் கல்லாதவர்களுமான இளைஞர்கட்கு முயற்சிவழியைத் தேடவுதற்கான சற்போதனைகள் மிக நன்கு கூறப்பட்டிருக்கின்றன. இடையிடையே முன் சரித்திரத்தை அநுபவித்துப் பிற்காலத்தில் பெருஞ் செல்வந்தராயும் அதிகாரிகளாயும் விளங்கிய கீழைத்தேசத்தவர்களும் மேலைத்தேசத்தவர்களுமான பெரியார்களின் சிவியசரித்திரங்களும் மிகச் சுருக்கமாகவும் உறைத்ததக்கபடியும் இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. ஆக்கியோனின் விரிந்த அனுபவமும் மனோபாவமும் நன்கு இந்நூலினிடத்தே பதியப்பெற்றிருக்கின்றது. இதன் விலை பிரதி ஒன்று 1 ரூபா ஆகும்.

கிழக்குந் தபால்:—இது மட்டக்களப்பிலிருந்து வாரந்தோறும் புதன்கிழமைகளிலே பிரசுரிக்கப்படும் ஒரு புதினப் பத்திரிகை. நாலு பக்கங்களைக் கொண்ட இப்பத்திரிகையின் உட்பக்கம் இரண்டும் ஆங்கிலத்திலும் வெளிப்பக்கம் இரண்டும் தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றது. எமக்கனுப்பப்பட்ட பிரதி, தொகுதி 1வ பகுதி 9 ஆகும். மட்டக்களப்பு மத்தியத்தெரு 19-ம் நம்பர் வீட்டிலிருக்கும் கத்தோலிக்க அநாதசாலை அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பெற்று, மட்டக்களப்பு, 'கதிரைவாச' K. V. M. சோமசுந்தரமவர்களால் பிரசுரிக்கப்பெறுவது. பிரதி ஒன்றன் விலை சதம் 10. மட்டக்களப்புப் பட்டணத்தவர் வருட சந்தா வருடத்திற்கு ரூ 4. வெளியிடங்களுக்கு ரூபா 5-50. இதன்கண் பொதுவர்த்தமானங்களும் பொது விஷயங்களும் நன்கு எழுதப்பட்டிருக்கின்றன.

மேற்போந்த பிரதிகளை நாம் ஏற்று எமது நன்றியுரிமையைக் கூறுகின்றோம்.

## சமாசாரத் திரட்டு.

### கொழும்பு சைவமங்கையர் கழகம்.

வருடாந்தக் கூட்டம்.

இக்கழகத்தின் வருடாந்தக் கூட்டம் நிகழும் பிரசோற்பத்தி ஞு கார்த்திகைமீ உகவ (12-21-31) சனிக்கிழமை பிற்பகல் 4½ மணி தொடக்கம் வெள்ளவத்தை "பீற்சன் லேனி" லிருக்கும், "தியோசொபிக்கல் சொஸைட்டி" மடத்தில் கூடப்படும், சைவமங்கையர் யாவரும் சமுகமாகும்படி வேண்டப்படுகின்றனர் என காரியதரிசிஸ்ரீமதி: நல்லைநாதன் சொர்ணகாந்தி அம்மையார் தெரிவிக்கின்றனர்.

### சிறையிருப்பதிலும் உயிர்விடுதல் நன்று.

நீர்கொழும்பு விளக்கமறியற் கூடத்தில் சிறைத் தீர்ப்பை எதிர்பார்த்திருந்த ஒருவன் அத்தீர்ப்புப்பெற முந்திச் சிறைச்சாலைத் திரசந்தியில் அணியை முறுக்கி மாட்டி அதன் தடத்தைத் தன்கழுத்தில் மாட்டித் தூங்குவதற்கிடையிற் சிறைச்சாலை யதிகாரிகள் கண்டு, ஸ்மரணையற்ற நிலையில் அவனைத் தடத்தி னின்றும் அவிழ்த்தெடுத்துச் சிகிச்சை செய்தனர். ஆனால் அவன் சிலமணிநேரத்தில் உயிர் துறந்தானும்.

### பெண்கள் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தல்.

இலங்கையில் இப்பொழுது பெண்களும் துப்பாக்கியெடுத்து ஆட்களைச்சுடவும் சண்டையிடவும் தொடங்கிக் கொண்டனர். பாணந்துறையில் ஒருவன் அடாத்தாகத் தென்னமரத்திலேறித் தேங்காய்பிடுங்க, போர்லஸ்சினு என்னும் ஒருத்தி இழுகின்ற துப்பாக்கியால்

மும்முறை சுட மும்முறையும் இலக்குத் தவறிவிட்டது; அதனைக்கண்டு அவளுடைய மகனாகிய ஒருகன்னி துப்பாக்கியைத் தாயிடமிருந்து பறித்துத் தான் இலக்கு பார்த்து அவனுடைய காலிற் சுட்டான். இருவர்மீதும் பாணந்துறைப் பொலிஸ் நீதிதலத்திற் பொலிசார் வழக்குத் தொடர்ந்துள்ளனர். இலங்கையிலே பெண்கள் காலந்தோறும் நவநாகரிகமடைந் வருகிறார்களென்பதற்கு இதுவும் ஒரு திருஷ்டாந்த மல்லவா.

### சைவசமய சன்மார்க்க சபை.

நிகழும் பிரசோற்பத்தி ஞு கார்த்திகைமீ உகவ (11-12-31) வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணியளவில் டிை சபையாரால் பொல்காவலை றயில்வே ஸ்டேசனையடுத்த கோவில் கட்டளையிலிருக்கும் தோட்டத்தில் புதிதாகச் சபையோரால் அமைக்கப்பட்டிருக்கும் பொல்காவலை சைவசமய சன்மார்க்க யோகபாடசாலையில் பிரவேசஞ்செய்ய எத்தனித்திருப்பதால் அப்பொழுது ஸ்ரீ மான் பொ தம்பிராசா [Chairman U. D C Kurunegala] அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் டிை சபையின் மகாசபை யொன்று கூடும்.

அத்தருணம் கண்டியில் வசிப்பவரும் தமிழில் மிக்க பாண்டித்திய முடையவருமாகிய திருவாளர் ச. சம்பந்தர் அவர்கள் டிை சபையின் முன்னேற்றத் திற்காக ஓர் சொற்பொழிவு நிகழ்த்துவாரென, சபைக்காரியதரிசி ஸ்ரீ. ஐ. தம்பிராசா தெரிவிக்கின்றார்.

### தற்கொலை.

சென்ற கிழமை சாயந்தரம் மூன்று மணியளவில் பருத்தித்துறையிலுள்ள ஒடக்கரைத் தெருவில் வசிக்கும் தில்லையம்பலம் மகாலிங்கம் என்னும் 25 வயதுள்ள வாலிபன் பேனைக்கத்தியாற் றனது கழுத்தை அறுத்துப்போட்டானும். உடனே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கெனக்கொண்டு சென்றபொழுது நிலைமை மிக அபாயமாயிருந்ததால் இடைவழியிலிருந்து திரும்பிவந்து மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு உடனே செய்யப்பட வேண்டிய அவசியமான சிகிச்சை செய்யப்பட்டுச் சிறிது நேரத்துக்குள் உயிர் துறந்துவிட்டான், பருத்தித்துறை உடையாராகிய திரு A. கணபதிப்பிள்ளை அவர்களால் மரணவிசாரணை நடத்தப்பட்டுத் தற்கொலையென்றே முடிவுசெய்யப்பட்டது. குறித்த வாலிபன் கப்பற்றொழிலாளனென்றும் தனது மாமியாருடன் வசித்தானென்றும் ஒரு கட்டுப் பீடியினால் மாமியாருடன் ஏற்பட்ட திருப்தியீனம் காரணமாகத் தற்கொலை செய்தானென்றும் கூறப்பட்டது. —கடித.

### தாசிக்கு காந்தியின் கடிதம்.

கோவாவிலிருந்து பம்பாய்க்கு ஏராளமான பெண்கள் வந்து விபசாரம் செய்து ஜீவனம் நடத்துகின்றனர். லீலாவதி அவர்களில் ஒருத்தி. கோவாவிலுள்ள தேவதாசி வகுப்பினைச் சேர்ந்தவள். மகாத்மாவின் சரிதங்களையும், உபதேசங்களையும் கேட்டு மனந் திரும்பித் தன மனதிறகுகந்த ஒரே புருஷனுடன் குடும்ப வாழ்க்கை நடத்த ஆவல்கொண்டு அவ்விதமே ஒரு புருஷனை வரித்து ஒழுங்கான இல்லற வாழ்க்கை நடத்தி வருகிறாள். மகாத்மா அப்பெண்ணுக்கு உபதேசம் செய்து அனுப்பிய கடிதம் வருமாறு:—

பம்பாய் திரு. லீலாவதி சர்தாருக்கு:

அன்பார்ந்த சகோதரியே!

இதுவே என் செய்தி. வாழ்க்கையில் தவறிவிழுந்த தன சகோதரிகளின்மீட்சிக்காக மனிதன் தனது கெட்ட நடத்தையை விட்டு அவர்களை உண்மையான வாழ்க்கைத் துணையாகக் கொள்ளவேண்டு மென்பது நியாயமே. ஆனால் இந்த விபசாரத்தை ஒழிக்கவேண்டுமெனில் தேவதாசி குலத்தைச் சேர்ந்த உன்னைப் போன்ற பெண்களே விபசாரத்திற் கெதிரிடையாகப் புரட்சி செய்து கிளம்பிப் பரிசுத்தமெனற அக்கினியைக்கொண்டு பிறரிடத்திலுள்ள கெட்ட நடத்தையை எரித்துவிடவேண்டும்.—உண்மையான; மோ. க. காந்தி.

மகாத்மாவின் இச்செய்தியை கோவாவிலுள்ள தேவதாசிப்பெண்களாகிய தனது இனத்தாருக்குத் தெரிவித்து அவர்களையும பாழும் விபசார வாழ்க்கையினின்று மீண்டு பரிசுத்த இல்லற வாழ்க்கையை நடத்தும்படி செய்ய லீலாவதி பம்பாயை விட்டுப் புறப்பட்டு'கோவா' விற்குச் சென்றிருக்கிறாள்,

மகாத்மாவின் உபதேசம் வெள்ளைக்காரர்களை மட்டுமல்ல; குடிகாரர்களையும், விபசாரிகளையும் கூடத்திருத்தி நல்வழி காட்டுவதாயிருக்கிறது. லோகோபகாரி.

## கொழும்பு கதிர்காம யாத்திரீகர் தொண்டர்சபை.

### மகாசபைக் கூட்டம்.

நிகழும் பிரமோதூத ஞு கார்த்திகைமீ 7வ (22 11-1931) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் டிை சபைமண்டபத்தில் இச்சபையின் ஆறுவது ஆண்டு நிறைவுவிழா நடைபெற்றது. சபைத்தலைவர் கௌரவ அ. மகாதேவா அவர்கள் சில அவசியமான காரியத்தினிமித்தம் அன்றைநத்தினம் வர இயலாதிருந்தமையால் உபசபைத்தலைவர்களில் ஒருவராகிய திரு க. இராசநாயகம் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர், மூன்று மணியளவில் சுப்பிரமணியர் வணக்கத்

தடனும் தேவார பாராயணத்துடனும் சபை ஆரம்பமானது.

காரியதரிசியால் முற்கூட்டக் குறிப்பு வாசிக்கப் பெற்று ஒப்புக்கொள்ளப் பெற்றதும் சபையின் ஐந்தாமாண்டு அறிக்கைப் பத்திரமும் செலவு வரவுப் பத்திரமும் வாசிக்கப்பெற்றுச் சபையாரால் அங்கீகரிக்கப் பெற்றது. பின் சபையின் காரியஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர்.

சபைத்தலைவர்:—கௌரவ அ. மகாதேவா.

உபதலைவர்கள்:—திரு. க. இராசநாயகம், திரு கா. கா. நாகலிங்கம், திரு வே விசயலிங்கம்.

இணைக்காரியதரிசிகள்:-திரு க. ஞானசெல்வம், வ. சி விசுவலிங்கம்

இணைத்தனாதிகாரிகள்:- திரு வே தி. சுப்பையாபிள்ளை ஆ. சின்னத்தம்பி

நிர்வாகசபை அங்கத்தவர்கள்.-திரு ஏ கணபதிப்பிள்ளை, மு முத்துத்தம்பி, ஆ வி நாகலிங்கம், கா கா கணபதிப்பிள்ளை, வே. கந்தையா, சி துரையப்பா, சி க. கந்தையா பிள்ளை, மா. ஆறுமுகம், க வைத்திலிங்கம், சி. சின்னையா, க. கணபதிப்பிள்ளை, V T. S. சிவகுருநாதர், அ. கந்தையா, த சுப்பையா சி. செல்லப்பா, வ பொன்னுச்சாமி, மு. சுப்பையா.

கணக்குப்பரிசோதகர்கள்:-திரு ஆர் இராசையா, எ. எஸ் கனகசூரியம்.

ஷ சபையின் விசேஷ நிதியின் வரவு செலவுக் கணக்கும் வாசிக்கப்பெற்றுச் சபையின் அங்கீகாரம் பெற்றது

பின்னர் பண்டிதர் நா முருகேசபிள்ளையவர்களால் "அன்பும் அறமும்" என்னும் விஷயத்தைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றதும் தேவார பாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது

இங்ஙனம்,
க. ஞானசெல்வம், வ. சி விசுவலிங்கம்,
இணைக்காரியதரிசிகள்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் குருபூசைக் கொண்டாட்டம்.

முன்னரே இப்பத்திரிகையில் அறிவிக்கப்பட்ட பிரகாரம் நாவலர் அவர்களின் குருபூசைத்தினம் சென்ற புதன்கிழமை (2-12-31) வண்ணார்பண்ணை சைவப்பிரகாசவித்தியாசாலையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முன்னொருபோதும் யாழ்ப்பாணத்தில் இப்பெரியாரது குருபூசை இவ்வளவு சிறப்பாக நடைபெற்றதில்லையெனலாம்.

அன்று காலையில் வழக்கம்போலக் குருபூசை நடைபெற்றது. மாலையில், தமிழும் சைவமும் தழைக்க, அவதரித்த இப்பெரியாரது திருவுருவப் படமங்கள் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டு மேளவாத்தியத்துடன் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டன. திருநெல்வேலிச் சைவ ஆசிரிய கலாசாலை மாணவர்களும், ஆசிரியர்களும ஒரு திருவுருவத்தைப், பார்ப்பவர் மனத்தை உருக்கத்தக்கவிதமாக அலங்கரித்து விமானத்திலேற்றி வாத்திய சகிதமாய் யாழ்ப்பாணம்—காங்கேயன்துறை ரோட்டு வழியாகச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குக் கொண்டுவந்தனர். இனனொரு திருவுருவப் படம் வைத்தீஸ்வர வித்தியாசாலையிலிருந்து புறப்பட்டுப் பெரிய கடைத் தெருவழியாய் மேற்படி சைவப்பிரகாச வித்தியாசாலைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த இரண்டு திருவுருவப் படங்களும் தெருக்கள் வழியாக ஊர்வலம் வந்த காட்சி நாவலர் பெருமானே மீள உடம்பெடுத்து யாழ்ப்பாணத்தைத் தரிசிக்க வந்ததுபோலிருந்தது.

இத்திருவுருவப் படங்கள் மேடையில் வைக்கப்பட்டபின் அவற்றிற்குப் பூசை செய்யப்பட்டது. தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. ஸ்ரீமான் த. கைலாசபிள்ளை அவர்கள் தலைமை வகித்தனர். மண்டபம் நிறையக் குழுயிருந்த ஜனங்கள் 2 நிமிடநேரம் எழுந்து நின்று நாவலர் பெருமானது திருவடிகளைச் சிந்தித்தனர். சபைத தலைவர் நாவலரவர்களைக் குறித்துச் சில பேசி, அப்பெரியார் எழுதிய சில வசனங்களை வாசித்துக் காட்டி, அவர் எதற்காகத் தமது சீவியத்தை அர்ப்பணஞ் செய்தார் என்று நன்கு விளக்கினர். "நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னும் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது அக்கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலை ஸ்தாபித்தலும், சைவப் பிரசாரஞ் செய்வித்தலுமேயாம்........." என்னும் வசனங்கள் அப்பெருந்தகையின் சீவியத்தின் இலட்சியத்தையும் பாஷாபிமானம் சமயாபிமானம் ஆதியவற்றையும் சபையோர்க்குக் காட்டி மனத்தைக் கொள்ளை கொண்டன. தாம் ஸ்தாபித்த வித்தியாசாலையைநடாத்தப் பொருளின்மையால் முட்டுற்று "திருச்சிற்றம்பலத் தெய்வ"யை நோக்கிக் கூறிய "மணி கொண்ட.........என்ற தொடக்கத்தையுடைய செய்யுள் அவரது பக்தி வைராக்கியத்தையும், வித்தியாசாலை ஸ்தாபித்தலில் அவருக்கிருந்த பேராசையையும், உயிரையும், துரும்பெனக் கருதும் வீரத்தையும் கேட்போர் மனதிற் பதியச் செய்தது. அதன்பின் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்கள் பெருமானின் சீவியத்தைக் குறித்து வெகு சாதுரியமாகவும், இனிமையாகவும் பேசினர். பண்டிதர் K. U. சாதன அவர்கள் பாமாலை புனைந்து போற்றினர். ஸ்ரீமான் V. நாகலிங்கம் அவர்கள் நாவலர் அவர்களின் கருத்தை நிறைவேற்றுவது பெருங் கடினன்

றும், அக்கருத்தை நிறைவேற்றுவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்கு இயன்றளவு பொருளுதவி செய்தல் சைவ சமயிகளது கடனென்றுங் கூறினர்.

ஸ்ரீமான் மா. சு. இளையதம்பி அவர்கள் எல்லாருக்கும் ஸ்துதி கூறி, இக்கொண்டாட்டம் வருடந்தோறும் நடைபெறச் செய்வது எங்கள் கடனென்றும், சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்கு எதிரே வரும் டிசம்பர்௴ 24௳, 31௳ வரைக்கும் உள்ள நாட்களில் இயன்ற பொருளுதவி செய்யவேண்டும் என்றும் பேசினர்.

தேவாரபாராயணத்துடன் கூட்டம் பூர்த்தியாயிற்று. கடித.


சைவசமயிகளே,
சைவ சமயத்தைப் பாதுகாக்க விரும்பினல்,
சைவவித்தியா வாரத்தில் (டிசெம்பர்௴ 24௳ தொடக்கம் 31௳ வரை)
சைவவித்தியாவிருத்திச் சங்கத்துக்குப்
பொருளுதவி செய்யுங்கள்.
இச்சங்கம் நிலைகுலைந்தால் வேறொருசங்கம் கூட்ட முடியாது.
10-12-31. ஷ சங்க மானேஜர்.


## இலங்கைப் புகைரதப்பகுதி விளம்பரம்.

இலங்கை அரசினர் புகைரதப்பகுதிப் புகைரதஸ்தானங்களில் 50 மைலுக்கு மேற்பட்ட தூரத்திலுள்ள ஸ்தானங்களுக்குக் கிரயங் குறைந்த புகைரதப் பிரயாணச்சீட்டுக்களை நிகழும் டிசெம்பர்௴ 19௳ தொடக்கம் ஜநவரி௴ 3௳ வரையில் உதவுவார்கள். இச்சீட்டுக்கள் ஜநவரி௴ 9௳ வரையிற்செல்லத்தக்கன. தலைமன்னார்ப்பாலத்திலிருந்து 50 மைலுக்கும் அதற்குமேற்பட்ட தூரத்திற்கும் எல்பநைமானமதுரை ஸ்தானத்திற்கும் அதற்கப்பாலும் நிகழும் டிசெம்பர்௴ 11௳ தொடக்கம் 31௳ முடிய புகைரத மலிவுப் பிரயாணச்சீட்டுக்கள் உதவப்படும் இச்சீட்டுக்கள் ஜநவரி௴ 15௳ வரையிற் செல்லத்தக்கன.

ஏனைய விபரங்களைப் புகைரதஸ்தானங்களுள் மாட்டப்பட்டுள்ள பெரிய விளம்பரப் பத்திரத்திற்காண்க.

T. E. டற்றன்,
புகைரதப்பகுதித் தலைவர்.
புகைரதத்தலைவர் ஆபீஸ்,
கொழும்பு, டிசெம்பர்௴ 3௳ 1931.
G 122 10th.)


இது உம்முடைய தொந்தரவுகளையும் கிலேசங்களையும்நீக்கும்
— மிகச் சொற்பவிலையில் வருடம்
— முழுவதும் நற்சுகம் உதவக் கூடா
— தும். எப்படியென்றுபாரும்
— சொற்பபணத்தைச் செலவு
— செய்து
லி ஓ பா L. O. B.
மருந்துப் பெட்டியை வாங்கும்.
இதில்:—
— லிட்டில்ஸ் ஓறியன்ரல் பாமில்
— திரு சிசா,
— ஹென்றீஸ் ஜ்வரஹரி
— ,, ஓமம் கற்பூர்
— ,, கில்லர கோல்ட்
— லி. ஒ. பா. இருமல் வில்லைகள்
இந்த ,, பேதிமாத்திரைகள்
8 — ,, சர்ம சம்ரக்ஷணி
ம் ,, அர்க்கந்தமாற்றி
முதலிற் சொல்லப்பட்ட
4
மருந்தின் தனிவிலைத் தமாத்திரம், அதாவது நபா 3. அணு 8. தபாற் செலவு பிரத்தியேகம்.
சாதாரணமான ஒவ்வொருவியாதிக்கும் நம்பிக்கையான ஔவுடதம். சுலபமானது. ஆனால் சக்திபுள்ளது, அநுபவத்திற் கண்டது. அநேகரால் கைக்கொள்ளப்படுவது
இதில் ஒருபெட்டியை உமது வைத்திய வியாபாரியிடம் வாக்கும்
அல்லது நேரே எழுதுவது:
லிட்டில்ஸ்
ஓறியன்ரல் பாம் டிப்போ,
பெரியதெரு,
மணிக்கூட்டுச்சந்தி,
கொழும்பு.
தபாற்பெட்டி இலக்கம் 298, அல்லது,
லிட்டில்ஸ் ஒறியன்ரல்பாம் அன்ட் பார்மசியூட்டிக்கல்ஸ் லிமிட்டெட்,
தபால்பெட்டி 67,
சென்னபட்டணம்.
(Y. 9, 1. 31—12. 32. C.)


## காந்திஜி பிரதம மந்திரி சம்பாஷணை.

லண்டன், டிசம்பர் 4

காந்திஜி இங்கிலாந்தை விட்டுப் புறப்படுமுன்னர் காலையில் பிரதமமந்திரியுடனும் மாலையில் ஸர் ஸாமுயல்ஹோருடனும் மிக முக்கியமான சம்பாஷணைகள் நடத்தினர். வட்டமேஜை மகாநாட்டின் ஒத்துழைப்பேற்படுவதற்கான முறைகளைப்பற்றி அவர் அச்சமயம் பரிசீலனை செய்தார். பிரதம மந்திரி பொறுத்தோரணையிலேயே பேசினர். சம்பாஷணை மிகுந்த நட்புடனேயே நடைபெற்றாலும், காந்திஜிக்கு இதில் திருப்தி யேற்படவில்லையெனத் தெரிகிறது

வங்காளத்தில் சமீபத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் அவசரச் சட்டத்தை ரத்து செய்வதைப்பற்றி பின்னர் ஸர் சாமுவேல் ஹோருடன் காந்திஜி விவாதித்தார்.

நேற்றுத்தினம் ஸர் டி-பி-ஸாப்ரூ 'செக்கர்வில்' பிரதம மந்திரியைக் கண்டு பேசுகிறார் காரியக்கமிட்டி புறப்பட எல்லாக் கமிட்டிகளுடையவும் அங்கத்தினர் விவரம் வேலை விவரம் முதலியவற்றை உடனே வெளியிடுமாறு அவர் பிரதம மந்திரியிடம் வற்புறுத்துவார் அத்துடன் புதிய அவசரச் சட்டத்தை வாபீஸ் வாங்கிக்கொள்வதினும் ஒத்துழைப்பிற்கான நல்லுணர்ச்சி அதிகமேற்படக்கூடுமென்றும் அவர் எடுத்துரைக்கக் கூடும்.

ஸ்ரீமான் ஏ ரங்கசுவாமி ஐயங்கார் இன்று பிற்பகல் பாரிஸுக்குப் புறப்பட்டார். -சு மி.

## பிரிண்டிஸி வரையில் போலீஸ் பந்தோபஸ்து.

லண்டன் டிசம்பர் 4.

பிரதினமும் காந்திஜியின்கூடவே, விடியற்காலை உலாவச் செல்லுவதுமுதல் இரவு படுக்கைக்குப் போகுமளவும் அவர் கூடவேயிருந்து வந்த இரண்டு போலீஸ் உத்தியோகஸ்தர்களும் காந்திஜி கேட்டுக்கொண்டதன் பேரில், பிரிண்டிஸி வரையில் மகாத்மாவுடன் செல்லுவார்கள். மகாத்மா நாளைக்காலை 9 மணிக்கு இங்கிலாந்தைவிட்டுப் புறப்படுகிறார். -சு. மி

## காமன்ஸ்சபை விவாதம்.

மகாத்மாகாந்தி புறப்படு முன்னர் பத்திரிகைப் பிரதிநிதிகளுடன் பேசிக்கொண்டிருந்த பொழுது, காமன்ஸ் சபை விவாதம் வட்டமேஜை மகாநாட்டுக்கு மாத்திரமல்லாது மந்திய வட்டமேஜைக்கும், மகாநாட்டிலிருந்து பொறுப்பாட்சி பெறப்போகின்ற பிரேரணைக்குப் பெரிய வெற்றியாகுமென்று; ஆனால் இந்த ஓட்டுமூலம் இந்தியா வெகுதூரம் திருப்தி செய்யப்பட்டிருப்பதாகக் கூறுவதற்கில்லை யென்றும் அதிகமாகவே கூறப்பட்டிருப்பது, விவாதத்தில் வற்புறுத்தப் பட்டிருப்பது உண்மையான பொறுப்பாட்சிக்கு வெகுதூரக் குறைவுபட்டதாக விருக்கிறதென்றும், காமன்ஸ்சபை வோட்டு மீண்டும் இந்தியாவை உண்மையற்ற நிலைமையிலேயே வைத்திருக்கிற தென்றும் காந்திஜி கூறினர் . சு. மி.




## சைவக்கிரியை விளக்கம்.

—:o:—

சைவசமயக் கிரியைகளின் இயல்பையும் அவற்றைச் செய்யும் முறையையும், செய்வதற்குக்காரணத்தையும் இந்நூல் தெளிவாக எடுத்துக் கூறுவது. சைவசமயவியல், கிரியையுறுப்பியல், தீட்சையியல், விவாகவியல், கோயிலியல், அபரக்கிரியையியல் என ஆறு இயல்களைக் கொண்டுள்ளது. இதனை இலகுவான தமிழ் வசனநடையில் எழுதியவர் ஸ்ரீ சு. சிவபாத சுந்தரமவர்களேயாம். இதன் விலை சதம் 25 (அணு ச) இந்துசாதன ஆலயத்திற் பெறலாகும்.

மானேஜர்,
இந்துசாதனம்.

வண்ணார்பண்ணை,
1—10—31.


பரம்பரை வைத்திய சந்ததியிலுதித்தவர்! பழனியில் கீர்த்திவாய்ந்த வைத்திய ஆசிரியர். ஏழு தலைமுறையாக அனுபவமுள்ளதும், மஹானின் அனுக்கிரகம் பெற்றதுமான பெரிய முறைகளால் தயாரித்த சிறந்த ஔஷதங்கள் எங்களிடத்தில் தான் கிடைக்கும்.

நீங்கள் என்றுமழியாத இளம்பருவத்தை அடையவேண்டுமானல்
பழனி, சி. எம். சாமி,
மகாவீரிய தங்க பஸ்பம்
சாப்பிடுங்கள்.

மஹான் உபதேசத்தால் பச்சிலை மூலிகைகளால் தருக்கற நீற்றப்பட்டது. தாது புஷ்டியில் இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. அபார தாது புஷ்டியும் தாதுக்கட்டும், பலமும், நல்ல பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். பலஹீனத்தாலும், கெட்ட அப்பியாசங்களாலும், விருத்தாப்பியத்தாலும் குறைந்துபோன வீரியத்தை கெட்டிப்படுத்தி மணிபோல் இறுக்கும் சக்தியுள்ளது. இதன் பெருமையை எழுதி முடியாது. ஒருமுறை உபயோகித்தவர்களுக்கே தெரியும். வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், கீரழிவு, இருமல் முதலிய சகல வியாதியையும் நீக்கிப் புத்திர சந்தானத்தை உண்டுபண்ணுவதில் முதன்மை பெற்றது. எப்போதும் சாப்பிட இடசரீரமாகும். 48கான் பஸ்பம் ரூபா20. 24கான் பஸ்பம் ரூபா 10. வி. பி. சார்ஜ் வேறு.

நற்சாக்ஷி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் நல்ல பலமும் பசியும், தாதுபுஷ்டியும் உண்டாயிருக்கிறது. K. S. கோவிந்தசாமி நாயுடு, நாகங்கோடு சிரம்பன், F. M. S.

மாதர்களுக்கு
இதுதான் வேண்டியது?
கெர்ப்ப எண்ணெய்.

மாதாந்தரகாலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும் சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கிக் கர்ப்பம் உண்டாகும். மிக்க அனுபவமானது. 1 புட்டி ரூபா 2.

நற்சாக்ஷி:—தாங்கள் எனது வீட்டுப்பெண்ணுக்கு எழுமலைக்கு அனுப்பிய கெர்ப்ப எண்ணெயால் சென்ற 3வருஷ காலமாய் ஏற்பட்டிருந்த ருதுசம்பந்த ரோகம் சகலமும் நிவிர்த்தியாகி முருகன் கிருபையால் ஒரு குழந்தையும் பிறந்து சுகமாயிருக்கிறது.

V. A. K. சாமி, வரதராஜபுரம்,
இராமச்சந்திராபுரம், போஸ்டு.

ஏராளமான நற்சாட்சிகளைக் கியாட்லாக்கில் காணலாம்.

பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா முதலிய அக்கியநாட்டார் மருந்துக்கு ஆடர் செய்யும்போது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏஜண்டுகள் தேவை.

வைத்திய ஆசிரியர். சி. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை, பழனி S. I.

(Q. 15, 10/12—

(2-ம் பக்கத் தொடர்ச்சி.)

அடிப்படையாகக் கொண்டிருக்கின்றதைப் பிரான்ஸியர் அவதானிக்கும்படியும்; நாம், மிஸ்டர் மாக்டொனல்ட் அவர்களின் அறிக்கையில் திருப்தியடையவில்லை யென்றும், பரஸ்பரம் நன்னம்பிக்கை கொள்வதினால் இந்தியப் பிரச்சினை நன் முடிவடைதல் கூடுமென்றும் கூறி, "இந்தியா தன்னிஷ்டத்தை எப்பொழுது அடையப்போகின்ற தென்பதைக் கடவுளே அறிவர்" என்று கூறி முடித்தனர். சனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். மஹாத்மா மிகவும் களைப்புற்றவராகக் காணப்பட்டனர்.

இந்தியாவிலே பொம் பூரிலே-தேசிய மஹாநாட்டுக் காரியச்சங்கம் கூடிற்று. அப்பொழுது ஸ்ரீமதி ஊர்மிளாதேவி பிரிட்டிஷ் பொருட்கள், வங்கிகள், வீமாச்சங்கங்கள், புகைக்கப்பல்கள் முதலியவற்றையும் அந்நிய ஆடையையும் பகிஷ்காரம் செய்தல் வேண்டுமென்னும் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

இந்த இயக்கத்தில் எவ்விதமான எதிர்ப்பும் செய்வதாக எண்ணமில்லையென்று சுபாஸ் சந்திரபோஸ் கூறினர்.

அலகாபாத்திலே வரிகொடா இயக்கம் இப்பொழுதே தொடங்கவேண்டாமென்று தீர்மானிக்கப் பட்டது. ஜவஹர்லால் நேரு, ஷேர்வானி, வெங்கடேச நீவாலி, ஸ்ரீ பிரகாசம் ஆகியவர்கள் உட்பட 8 அங்கத்தவர்களும் வந்திருந்தனர்.

## மஹாத்மாவின் செய்திகள்.

மொன்ட்ரூ, 7-12-31.

இன்றுகாலை முழுவதும் பெருமழை பெய்தமையால் மஹாத்மா வீட்டினுள்ளேயே இருந்தனர். இன்று சாயந்தரம் மழைவிட்டவுடன் 'வில்லெநூவ்' என்னுமிடத்திற்கு நடந்துசென்றனர்.

வழக்கம்போல அவர் இன்று மௌன விரதத்தையனுட்டித்தார். நாளைக்கு அவர் 'லோசேன்' என்னுமிடத்திற்குப் போவார். 'சுவிர்ஸர்லண்ட்'டில் நிற்கும்வரையும் அவர் அநேக கூட்டங்களிற் பேசுவார்.

லண்டனிலேயிருந்து வில்லெநூவ் என்னும் இடம்வரையும் அவருடைய மெய்காப்பாளராக உடன் சென்ற இரண்டு ஆங்கிலேய உளவறியும் பொலிஸ் உத்தியோகத்தராலும் சுவிற்ஸர்லண்டிலுள்ள உளவறியும் இரு பொலிஸ் உத்தியோகத்தராலும் அவர் பாதுகாக்கப்படுகின்றனர்.

## சேனை அதிகாரிகளின் கட்டளை.

லண்டன் 7-12-31.

இந்தியச்சேனையில் உத்தியோகத்தர்களாகப் புறப்படுவதற்காகவிருந்த பெருந்தொகையினருக்குப் புறப்பட வேண்டாமென்ற கட்டளை செய்யப்பட்டிருக்கிறது. இது செலவுச் சிக்கனத்தை யுத்தேசித்தெனக் கூறப்பட்டபோதிலும் சடுதியான கட்டளையமைப்பினால் ஏதோ அசாதாரண சம்பவம் நிகழ்ந்திருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

## மகாத்மாவின் செய்தி.

"யுத்தப் படைக்கலங்களின் பாரத்தினாலேயுண்டாய நோயினால் ஐரோப்பா வருந்துகின்றது. அநேக நாடுகள் இப்போது, நல்லொழுக்க வறப்பும் பொருள் வறப்பும் உள்ளவைகளாகி விட்டன" என்று ஒரு பெருந் திரளான சனங்களுக்கு, இங்கு, 45 நிமிடம் வரையில் தமது சத்திய முறையுள்ள சாத்வீகப் போரைப்பற்றி உபந்நியாசம் செய்யும்போது, மஹாத்மா எடுத்துக் கூறினர். இது ஆசியாக் கண்டத்திலும் தொற்றிவிட்டது; ஆனால் இந்தியா சாத்வீக வழிவகைகளினால் விடுதலையடையப் பிரயத்தனப்படுகின்றது அதனால் நன்னம்பிக்கைக்கிடமிருக்கின்றது; இந்த விஷயத்தை ஊன்றிப் பரிசீலனை செய்து பாருங்கள் என்று கூறி, "இந்த இயக்கம் வலாற்காரமின்றியும் சத்தியானுசாரணையுடனும் நடப்பதாக நீங்கள் முடிவுகொண்டால் நீங்கள் எங்கள் பக்கஞ் சாருங்கள். ஐரோப்பிய மனோபாவத்தைப் புதிதாக்கலாம்" என்றனர்.

ஈற்றில் எல்லோரும் மெச்சி ஆரவாரித்தனர். நாளைக்கு அவர் பள்ளிக்கூடச் சிறுவர்களை வரவேற்பார்.

வியாழக்கிழமை ஜெனிவாவில் ஒரு பிரசங்கம் செய்வார்.

பம்பாய் 8-12-31.

டிசம்பர் 28-ந் திகதி பம்பாய் வந்து சேரும் மஹாத்மா உடனே அகமதபாத்திலே காந்தி ஆச்சிரமத்திலே நோய்வாய்ப்பட்டு ஆபத்தான நிலைமையில் இருக்கும் தனது நேசனும் உடன் பணியாற்றியவருமான 'இமாம் சாஹிப்' என்பவரைச் சந்திப்பதற்கு மஹாத்மா விரைந்து செல்வார். இவர் தென் ஆபிரிக்காவிற் றொடங்கி மஹாத்மாவுடன் தொண்டாற்றியுள்ளவர்.

டிசம்பர் 30-ந் திகதி இந்தியத் தேசிய மஹாநாட்டின் பணியாளர்சங்கம் அகமதபாத்திலேயே நடைபெறும். அதன்பின்னரே மஹாநாட்டாரின் மேற்கொண்ட வேலைகளைப்பற்றித் தெரியவரும்.

லண்டன் 8-12-31.

பாராளுமன்றத்தின் பட்டவர்த்தனர் சபையிலே இந்தியாவைப்பற்றிய விஞ்ஞாபனம் விவாதிக்கப்பட்டது. லோட்லோதியன், அரசாட்சிச் சார்பில் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். லோட் லொயிட் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தனர். லோட்ஸர்வின் பிரசன்னராயிருந்து பேசினர். பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

[விவரங்கள் இனிமேற் பிரசுரிக்கப்பெறும். —ப, ர்.]

## இந்தியாவுக்குப்பூர்ண சுதந்திரம்.

லண்டன் டிசெம்பர் 4.

காந்திஜி தங்கியிருந்த இடமான கிழக்கு லண்டன் கிங்ஸ்லிஹாலில் மிஸ்டர் ஜியார்ஜ் லான்ஸ்பரி பேசியபொழுது கூறியதாவது:—

இந்தியர்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் உரிமையை வேண்டுகின்றனர். சர்ச்சில் போன்றவர்களிருப்பினும், ஒரு தேசம் இஷ்டப்பட்டால் நரகத்திற்குப் போவதானாலும் சுவர்க்கத்திற்குப் போவதானாலும் அதற்கு உரிமையிருக்க வேண்டுமென்ற புனிதக் கொள்கையில் நான் பூர்ண நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

இந்தியா இந்தியருக்கே யுரியதாய், இந்தியாவை இந்தியரே ஆண்டு கொள்ள உரிமையாக்க வேண்டுமென்பதை நிபந்தனையின்றித் தொழில் கக்ஷியினர் அபிப்பிராயப் படுகின்றனர்.

இந்தியாவில் இப்பொழுது அமைதியின்மையேற்பட்டிருக்கிறது. எல்லாக் கவர்ன்மெண்டுகளும் அமைதியை நிலை நிறுத்த வேண்டுவது தான். ஆனால் ராஜ தந்திரிகளாக விரும்பவர்கள் அமைதி யின்மைக்கான காரணமென்னவென்பதை அறிந்து அதை நிவிர்த்திக்க வழி தேடவேண்டும். மிஸ்டர் மாக்டொனல்டு இக்கொள்கையே பின் பற்றவேண்டுமென்று தொழில்கக்ஷி எதிர்பார்க்கிறது ராஜப்பிரதிநிதிக்கும் கவர்னர்களுக்கும், 'லார்ட் இர்வின் செய்ததுபோல் நீங்களும் செய்யவேண்டும், பலாத்காரத்தை ஒழிக்க என்னமுறைகள் நாங்கள் அனுஷ்டிக்க வேண்டுமென்று எனக்கு பிரதம மந்திரி அறிவிக்கவேண்டும்.

இவ்விதம் செய்யும் பக்ஷத்தில் இந்தியவில் சமாதானமும் சுபிக்ஷமும் உண்டு பண்ண இந்தியாவுக்குப் பூர்ண சுதந்திர மளிப்பதுதான் சரியான வழியென்பதை கன்ஸர்வெடிவ்கள் சேருக்கு நேராக அறிய சந்தர்ப்ப மேற்படக் கூடும். சு. மி

## காங்கிரஸ் கோரிக்கை.

காந்திஜியின் அறிக்கை.

பிரயாணமாகும் காலத்தில் காந்திஜி ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். இது இந்திய சுய ஆட்சி சங்கத்தினால் வெளியிடப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் பூரண சுயேச்சையே கோருகிறதென்றும், ராணுவம், வெளிநாட்டு விஷயங்கள், செல்வ விஷயம் முதலியவற்றில் பூரண ஆதிக்கமளிக்கப்படவேண்டுமென்றும், பரஸ்பர பொறுப்புக்களை நிறைவேற்றுவதை முன்னிட்டு இருதரப்பினரும் இஷ்டப்பட்டால் பிரிவதற்குட இங்கிலாந்துடன் இந்தியாவுக்குச் சம அந்தஸ்து அளிக்கப்படவேண்டுமென்றும் இந்த அறிக்கையில் வற்புறுத்தப்படுகிறது

இந்தியாவின் நன்மைக் கொத்த பாதுகாப்புகளை ஏற்க இந்தியா இஷ்டப்படுகிறது நிஷ்பக்ஷபாதமான ஒரு சபை விசாரணை செய்த பின்னர் இந்தியாவுக்கு நியாயமாக ஏற்படும் கடன் பொறுப்பைக் கழிக்க இந்தியா தயாராகவிருக்கிறது

சிறுபான்மையோர் விஷயத்தை ஒரு தேசியத் தோரணையில் முடிவு செய்வதையே காங்கிரஸ் ஆதரிக்கிறது ஆனால் அவசிய மேற்படும் பக்ஷத்தில், சரித்திரக் காரணத்திற்காக முஸ்லீம்களுக்கும் சீக்கியருக்கும் சட்டசபையில் ஸ்தானங்கள் ஒதுக்கக் காங்கிரஸ் இஷ்டப்படும்

தீண்டத்தகாதவர்களின் கதியை காங்கிரஸ் விசேஷமாகக் கவனித்து வரும். அவர்களைத் தனித்து நடத்துவது நியாயமே யாகாது அதனால் தீண்டாமையை ஒழிக்க மகத்தான முயற்சி செய்யப்படும் பொழுது, தீண்டாமைக்குச் சட்டப்படி ஒரு அந்தஸ்து ஏற்படுத்துவதாகும்

ஜாதி வகுப்பு, நிறம், மதம் காரணமாக யாருக்கும் எவ்வித அரசியற் தடையு மேற்படுத்தப் படமாட்டாது. வயதான எல்லோருக்கும் வோட்டுரிமை யளிக்கப்பட வேண்டுமென்பது காங்கிரஸ்கக்ஷியாதலால் சிறுபான்மை வகுப்புகள் தேசத்திற்குச் சேவை செய்து அதன் மூலம் சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்படுவதில் எவ்விதக் கஷ்டமுமிருப்பதற்கில்லை சு மி

## டாக்டர் மூஞ்சேயின் அபிப்பிராயம்.

லண்டன், டிசெம்பர் 5

டாக்டர் மூஞ்சே இன்று பாரிஸுக்குப் பிரயாணமானார் டிசம்பர் 25-ந் தேதி அவர் இந்தியாவுக்குப் புறப்படுகிறார்

சர்வகக்ஷி மகாநாட்டு முடிவைப்பற்றி டாக்டர் மூஞ்சே கூறியதாவது:- ஹிந்து மகாசபையினரும் முஸ்லீம் ஸ்தாபனங்களும் தங்கள் சண்டையின் மூலம் இந்தியாவின் நன்மைகள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதை நன்கு பரிசீலனை செய்ய இப்பொழுது அவகாச மேற்பட்டிருக்கிறது. ஹிந்து மகாசபை சம்பந்தப்பட்ட மட்டில பிரதம மந்திரியின் அறிக்கை உருவான வேலைகளுக்கு விசேஷ இடமளித்திருக்கிறது சுதேச மன்னர்கள் பிற்காலத்தில் பெடரேஷனில் சேருவதாக முடிவு செய்வதில் உதவவும், கோயில் பிரவேச முற்பட எல்லா விஷயங்களிலும் தீண்டாமை விலக்கப் பட்டு விட்டதென்று காட்டவும் ஹிந்து மகாசபை முற்பட வேண்டும்]

சுதேசமித்திரன்.

## மிஸ்டர் F. H. P. ஜோசெப்.

வோட் மோட்டர் கம்பெனி (இந்தியா) பதிவு செய்யப்பட்டது. இந்தக் கம்பெனியின் கொழும்புக் கிளை ஸ்தானத்தில் உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்த, மேற்சொல்லப்பட்ட மிஸ்ரர் எவ். எச். பி. ஜோசெப் அவர்கள் வடமாகாணத்திலே "வோட்" மோட்டர் ரதங்களை விற்பனை செய்யும் தத்துவம் பெற்ற பிரதிகர்த்தராக யாழ்ப்பாணத்திலே ஸ்திரமாக வசித்தற்கு வந்திருக்கின்றனர் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

Mis. 427. 10-12-31.

## வித்தியா விநோத விவேகம்.

(வண்ணை வை. இ.)

ஐரோப்பாவிலுள்ள மாதர்கள் முகத்தில் ரத்தம் அதிகமாக ஏறி அழகு வரும் பொருட்டுத் தலைகீழ் ஊன்றிக் காலை மேலே உயர்த்திப் பயிற்சி செய்கிறார்களாம். ஆடவர்களும் இவ்வாறே செய்யலாம். இதனால் நரை திரை மறுவத்துடன் கண்ணொளியும் பெருகும் இவ்வாறு செய்யும் பயிற்சிக்கு சிர்ஷாசனம் என்று யோக சாஸ்திரம் கூறுகிறது

## சர்வம் சிவ சக்திமயம்.

மேல் நாட்டில் மக்களின் முகப்பரீட்சை செய்வோர் ஆச்சரியங்களைக் கண்டு பிடித்திருக்கின்றனர். பல போட்டோ படங்களையெடுத்து அவைகளில் முகத்தின் ஒரு பாகத்தை மறைத்து விட்டுப் பார்த்தல் ஸ்திரீகள் முகங்களில் இடது பாகம் புருஷர் முகம் போலவும், புருஷர்கள் முகங்களில் இடது பாகம் ஸ்திரீகள் முகம் போலவும் இருக்கின்றன. பொதுவாகப் புருஷர்களிடம் ஸ்திரீ குணங்களும் ஸ்திரீகளிடம் புருஷர் குணங்களும் காணப்படுவதைச் சாதாரணமாகப் பார்க்கலாம். இது மனிதர்களிடம் மாத்திரமன்றிச் செடிகொடிகளின் இலைகளையெடுத்து நடுமத்தியில் நரம்பில் கிழித்துவிட்டுப் பார்த்தால் ஒரு பாதி மற்றொரு பாதியுடன் ஒவ்வாமலிருப்பதைப் பார்க்கலாம்.

ஆணிலே பெண்ணும் பெண்ணிலே ஆணுமாய் உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் அர்த்த நாரியாக அமைந்திருக்கும் அற்புதம் நோக்கத்தக்கது.

## சாந்தி நிகேதனம்.

வங்காளத்திலே போல்பூரிலுள்ள கவிராயர் ரவீந்திர நாதரின் சாந்தி நிகேதன கலாசாலையைப் பற்றி அங்கு மாணவியாயிருந்த ஸ்ரீமதி ஹதீப்சிங் சென்றவாரத்தில் கொழும்பில் பேசினர்:—

### மாநிழல் கலாசாலை.

சாந்தி நிகேதன் சர்வகலாசாலை 13 வருடங்களுக்கு முன்னர் கவியரசர் தாகூரினால் நிறுவப்பெற்றது. ஆரம்ப காலத்தில் கவியரசர் ஒருவரே இதற்கு ஆசிரியராக விருந்தனர் ஆனால் நாள் செல்லச் செல்ல மாணவ மாணவிகள் அதிகரிக்கவே கவியரசர் இன்னுஞ் சில வல்லுனர்களைத் தமக்குத் துணைவர்களாக ஏற்படுத்திக் கொண்டனர்.

கல்கத்தா நகரிலிருந்து வெகுதூரத்துக் கப்பால் சுமார் நூறு மைல் தூரத்திலே சாந்தி நிகேதன் இருக்கிறது இங்குள்ள கிராமத்தினின்றும் மூன்று மைல்தூரத்திலேயே கலாசாலை இருக்கின்றது. கலாசாலைக்குக் கட்டிடங்கள் யாதொன்றுமில்லை சின்னஞ்சிறு குடிசைகளின் கூட்டங்களையே அங்கு காணலாம். அங்குள்ள ஆசிரியர்கள் அனைவரும் சிறுவர் சிறுமிகள் மீது விசேஷ கவனஞ் செலுத்திக் கல்வி யூட்டுகின்றனர். மாநிழலிலே மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் பாடங்கள் கற்றுக் கொடுக்கப் படுகின்றன. மெட்ரிகுலேஷன் பரீட்சை வரைக்கும் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கப் படுகின்றது. இது நீங்கலாக சங்கீதத்தில் விசேஷ கவனஞ் செலுத்தப் படுகின்றது. இப்பாட போதனைக்கு கவியரசரும் அயல் நாட்டு உள் நாட்டு ஆசிரியர்களும் கவனித்து வருகின்றனர்.

### கலையும் கைத்தொழிலும்.

கைத்தொழில் கல்வி நன்றாக புகட்டப்பட்டு வருகின்றது. மாணவர்கள் கிராமங்களுக்கும், வயல், காடுகளுக்கும் யாவுக் காரியங்களையும் பிரத்தியட்சமாய்க் கண்டுகொள்ளும் பொருட்டு அழைத்துச் செல்லப்படுகின்றனர் நெசவு, கிருஷித் தொழில் முதலியவை கற்றுக் கொடுப்பதற்கெனப் பிரத்தியேகமாய் ஓர் பகுதி யிருக்கின்றது.

சகல கலைகளிலும் முக்கியமானது சித்திரக் கலையே யாகும். இக்கலை கற்றுக் கொடுப்பதற்கென ஆசிரிய நிபுணர்க ளிருக்கின்றனர், மாணவர்கள் தங்கள் இஷ்டப்படி இக்கலையை பெருக்கிக் கொள்வதற்குரிய வழியில் விடப்படுகின்றனர். அப்பால் ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்களையும் அவர்களுக் கிஷ்டமான வழியில் பயிற்றுவிக்கின்றனர்.

வசந்த காலம், கோடைகாலம், இலையுதிர் காலம், குளிர் காலாலம் ஆகிய நான்கு காலங்களின் ஆரம்ப தினங்களே கலாசாலை மாணவர்களுக்கு விசேஷ வைபவ நாட்களாகும். அத்தினங்களில் மாணவர்கள் சுற்றுப் பிரயாணத்திற்காக அழைத்துச் செல்லப் படுகின்றனர்.

—"லோகோபகாரி"

## விகடத்துணுக்குக்கள்

மு. செல்லையா அல்வாய்-தேந்து வதிரி தே. சை. வி. சாலை.

முற்போக்கர்: ஐயா! உபாயனம் (பூணூல்) எச்சாதியார் தரிக்கவேண்டும்

பிற்போக்கர்: பிராமணர்தான்.

முற்போக்கர்: எல்லாச்சாதியாரும் இக்காலம் தரிக்கிறார்கள்.

பிற்போக்கர்: மிக்க ஈனமாயிற்றே.

முற்போக்கர்: எல்லாச்சாதியிலுமுள்ள பாலர், விருத்தர், பெண்கள் ஆகிய பலரும் இப்போது மூக்குக்கண்ணாடி தரிக்கிறார்கள் இதுதான் உபாயனம். (உப+நயனம்=உதவிக்கண்)

புது அபிமானி: ஓய் சோடாப்போத்தல் விலை என்ன?

மது அபிமானி: பருத்தித்துறை சாவகச்சேரி என்னுமிடங்களில் [2 போத்தல் சாராயம்] 5½ ரூபா விலையாமே,

புலவர்: தம்பி நீர் சிரத்தையுடன் படித்துப் பாண்டித்யம் பெற்றால் உமக்கும் உமது பிதாவுக்கும் பெரும் பேருண்டாகுமல்லவா,

புவனேந்திரன்: ஐயா! சிரத்தையுடன் படித்துப் பாண்டித்யமடைந்தவர்கள்தான் தந்தை பெயருக்கு நாசம் வைக்கிறார்கள்.

புலவர்: இதென்ன பொருந்தாத பேச்சாயிற்று.

புவனேந்திரன்: பொருந்தாப் பேச்சல்ல, என்னை எல்லோரும் ச புவனேந்திரன் என்று அழைப்பார். ஆனால் புலவர்களை சிவஞானமுனிவர், நச்சினார்க்கினியர், ஆறுமுகநாவலர், நக்கீரர் தொல்காப்பியர் என்று தந்தை பெயர் இன்றியே வழங்குவர்.

முன் (3-12-31) வெளி வந்தவற்றிற்கு விஞாககாரனுப்பிய விடை.
1. ஈழகேசரி
2. சகதேவர்
3. வேணுகோபாலன்.

[3-12-31ல் வெளிவந்தவற்றிற்கு விடை யாரும் அனுப்பவில்லை. வை.இ.]

19—11—31 இல் வெளிவந்தவற்றிற்கு கோலாலம்பூர் கா. ச. சுப்பிரமணியம் அனுப்பிய விடை
1. குழவி
2. அநுராசபுரம்
3. மட்டுவில்

## வினாக்கள்.

I வ. இரத்தினசாமி; இணுவில்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

1, 2, 3, 4, 5 = பரமசிவனை அழைத்தலைக் குறிக்கும். 6, 7, 8, 9, 10 = வாழ்த்துக்கள் எங்கள் நாவிலுள்ளன குறிக்கும். 11, 12, 13, 14, 15 = மதுரையுள்ளானது இருவடியைக் குறிக்கும். 16, 17, 18, 19, 20 = நாசத்துக்கதிபதியைக் குறிக்கும். 21, 22, 23, 24, 25 = செல்வம் வரக் கடவது என்பதைக் குறிக்கும். 1, 6, 11, 16, 21, 22, 23, 24, 25 = பதுமமாகிய நல்ல செல்வம் வரக்கடவது என்பதைக் குறிக்கும். 16, 11, 6, 1, 2, 3, 4, 5, 10, 15, 20, 25, 24, 23, 22, 21 = "சமது பரமசிவனடி பசுருவபிவி" என்றாகும் எழுத்துக்களை நிரப்புக.

II ஆ. சின்னத்துரை, V. S. L. C. மாணவன், சீர்வேலிச் சைவப்பிரகாச வித்தியாசாலை.

1. ஒன்றொன்றாய்க்காய்ப்பது ஒருமிக்கப்பழுப்பதென்ன?
2. தாயிட்ட முட்டை, தகப்பன் பொரித்த குஞ்சு, தாய் வீட்டைபோனால் கூழ்முட்டை அது எது?

## சோமவார விரத மான்மியம்.

"உத்தம விரதங் தன்னுள் உத்தமம் சோமவாரம்" என்றபடி சிவவிரதங்களுட் சிறந்த சோமவார விரதத்தின் மகத்துவத்தையும் வரலாற்றையும் அதனை அநுட்டிக்க வேண்டிய முறையையும் அநுட்டித்தோர் பெற்ற பேறுகளையும் இலகுவான தமிழ்வசன நடையில் இது கூறுவது; இதன்கண்ணுள்ள சீமந்தனி யென்னும் உத்தமியின் சரித்திரம் படிக்கப் படிக்கத் தெவிட்டாது தித்திப்பது. நூலின் இறுதியில் விரதகாலத்து ஓதத்தக்க தோத்திரப்பாக்களுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. விலை சதம் 15 (அணா 2½)

வண்ணார்பண்ணை, 12—11—31 } மனேஜர், இந்துசாதனம்.



(Y. 19 28 9 31 to 27 9 32.)

## சைவ வித்தியா வாரம்.

கற்றுணர்ந்தோரேத்தும் பிரபு சிகாமணிகளே! சைவாபிமான சீலர்களே!

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்னும் பெருநாவலர் வாக்கிற்கிசைய, நல்லற நிரப்பிப்பல் புகழ் நிறீஇய வருங்கலை விநோதரும், பரசமய கோளரியும், கவிஞர் வயிரப்புக் கல்விப் பிரசங்க சிகாமணியுமாகிய நாவலர் பிரானொருவர், "தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலை ஸ்தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம்" எனக் கூறிப் போந்த மூதுரையைப் பொன்னேபோற் போற்றி, வேண்டிய வேண்டியாங்கியும் இறைவன் றிருவருட் பேற்றால் நிறைவேற்றிய கல்விப் பிரியராய செல்வப் பிரபுக்கள் எங்கணுங் காணப்பட்டார்கள். அப்புருட ரத்தினங்களுள், இலங்கைப் பெருங்கிழவரும் ஒருவராய் வைத்தெண்ணப்படுந் தகைமைவாய்ந்த பேரறிஞராயாவர். இப்பெரியார் தங்காதன் மக்களும், கலையின் மக்களும், மற்றறிவுடை மக்களும் உன்னுதொறுன்னுதொறன்னங் கவலை இவவுல [illegible] வின்னுலகெய்தினரே! இவ்வுத்தமப் பிரபு, ஆடவர் தமக்கு மணியிழையார் தமக்குமாக இரு வித்தியா நிலங்களை நிறீஇப் போற்றலும், பெருங்கீர்த்தியு மெய்தினரே! இப்பேரறிவாளரது பாஷாபிமானமும் தேசாபிமானமும் பல்லாற்றானும் போற்றற்பாலவே! பீடு சான்ற இப்பெருந்தகையார் போன்ற உத்தம ரத்தினங்களின்னுமுளர். அவர்களுள், நமதாசிரிய கலாசாலையை ஸ்தாபித்த பிரபு சிகாமணியாகும் ஸ்ரீமான் இராசரத்தின மவர்களும் ஒருவரேயாவர். இவர், சைவசமயம் விளக்கவும் இளஞ்சிறார் நனகுகற்று, பல்வழிக்களுஞ் சேறலையொழித்து நல்வழிக்கணின்று இறைவன் றிருவருட் பேற்றைப் பெற்றுய்வான் கருதியே இவ்வாசிரிய கலாசாலையை 1928-ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஸ்தாபித்தார்கள். இவர்கள், செய்யாமற் செய்த விப்பெருதவிக்காக யாம் செய்யக் கிடந்த கைம்மாறு எம் மனமார்ந்த வந்தனமேயன்றிப் பிறிதொன்றில்லை.

இற்றைக்குச் சில வருடங்கட்கு முன்னர் இந்நாவலந்தீவின்கண்ணே அநேக ஆசிரிய கலாசாலைகள் பரக்கெழுந்தன. ஆயினும், மிஷனரிமாரதும், கிறீஸ்தவர்களதும் ஆதிபத்தியத்தின் கீழ் நடந்தன. அக்காலத்திலே இக்கலாசாலைகளில், பயிலும் மாணவர்கள் முதலில் ஞானஸ்நாநம் பெற்றே பயிலவேண்டியவர்களாயிருந்தார்கள். அக்கலாசாலைகளிற் பிரவேசிக்கும் மாணவர்கள் அவர்களது பிரதான கொள்கையாகும் "No training without Conversion" என்பதைக் கவனிக்கவேண்டியவர்களாயிருந்தார்கள். இவ்வாறான நிலையில், நம் நாட்டின்கண் நாவலர்போன்ற வித்துவ சிரோமணிகள் தோன்றி, மிஷனரிமாரையும் அவரது கொள்கைகளையும் நிராகரித்து, சுவமத மொன்றனையே ஸ்தாபிப்பான் விழைந்த திருவுள்ளத்தோடு பற்பலவிடங்களில் சைவ வித்தியாசாலைகளை ஸ்தாபித்தும், சைவப் பிரசாரணங்களைச் செய்தும், மற்றின்னன பிறவாற்றானுந் தமிழ்மொழியை வளர்த்து வந்தார்கள்.

இஃதிவ்வாறாக, நம் நாட்டுச் சிறார் கற்றற் கேற்றனவும், சமயக் கல்வியை யூட்டுவதற்குத் தகுந்தனவுமாகிய சைவாசிரிய கலாசாலைகள் முன்னர்க் காணப்படாமையானிக் கலாசாலை எழுந்ததாகும். இக்கலாசாலை வருடந்தோறும் பன்னூற்றுக் கணக்கான இளைஞரை ஆசிரியர்களாகப் பயிற்றி இந்நாட்டெங்கணும் பரவச் செய்தல் யாண்டும் பிறண்டும் போற்றற் பாலதேயாகும்.

இப்பொழுது மிடியெனும்பாவி யிடர் பிடித்தலைக்கிக்கலாசாலை தமிழ்ப் பயிரைச் செவ்வனே வளர்க்கவியலாது இடர்ப்படுதல் யாவருமறிந்த விஷயமே. ஆதலான் இக்கலாசாலை முத்தமிழ் வல்ல வித்துவான்களாலும், பண்டிதர்களாலும் சிறந்து விளங்கவும், கண்டாரனைவரும் இஃது பல்கலைக் கழகமே! இன்றேல் பொதுநிலைக் கழகமே! எனச் சிந்திக்கும் வண்ணம் விளங்க வைத்தல் ஆசிரிய மாணவர்களாகிய எங்களதும் பரோபகார சிந்தையும் மிக்க தேசாபிமானிகளாகிய உங்களதும் கடனன்றோ! யாம் நினைத்தவற்றை நினைத்தவாறு முடிப்பதற்குப் பணம் இன்றியமையாது வேண்டற்பாலதாகும். அதுவுமன்றி ஆசிரியமாணவர்களாகிய யாம் கற்பித்துப் பயில்வதற்கு எமது கலாசாலையகத்தில் ஓர் சாதனா பாடசாலை யமைதல் இன்றியமையாத தொன்றாகலானும் அதுவே அரசாட்சியாரது கொள்கையாகலானும், அஃதூஉம் உங்கள் உதவியின்றி முடித்தல் கூடாமையானும், இப்பொழுது பெருங் கடனில் மூழ்கி யிருக்குங்காலமாகலானும், உங்கள் உதவியைப் பெரிதும் விரும்பி வேண்டினும்.

ஆதலால் கண்ணியம்மிக்க புண்ணிய சீலர்களே! மகாத்மா காந்தியெனும் மேதாவியால், "You (Hindues, have a right to Control the education of your own Children, and I am glad that you have got your own Board of Education") எனப்பலவாறு புகழ்ந்துரைக்கப்பட்டதும் பன்னூற்றுக் கணக்கான வித்தியாசாலைகளைப் பரிபாலித்து நடாத்துவதுமாகிய ஓர் சங்கமுண்டு. இச்சங்கத்தார் மது கலாசாலையை செவ்வனே நடாத்துவதற்கும் கல்வியை வளர்ப்பதற்குமாக 100000 ரூபாய் வேண்டியவர்களாய், யாம் இதுபொழுது என் செய்வாமெனச் சிந்தையில் உன்னி எல்லுமெல்லியும் வருந்தாநிற்கின்றனர். ஆதலால், குணைநனியதனினுங் கூர்மதிபெறீஇய ஆன்றோர்களே! நீவிர் இதனைச் சிந்தியாததென்னே!

நிற்க, இச்சங்கத்தார் வருகிற மாதம் 24-ம் திகதி தொடக்கம் தங்கள் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்குப் புறப்படுவார்களாகலானவர்கள் வரவை நீவிர் எதிர்கொண்டு,

"வாக்குக்கலகத்தொரு சிறிது வாய்தப்பிற்
றாக்குங்கவிரேறு தயருறு—ஆக்கதுகொண்
டேறுமெறும்பிக்கொருகோடியுய்யுமால்
ஆறுங்கிளையோடயின்று" எனக்கூறியாங்கு,

உற்றுழியுதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலைமுனியாது எம்மையும் எமது ஆசிரியகலாசாலையையும் ஆதரித்து என்றுமழியாப் புகழ் பெற்றேகி, றன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளாகிய இறைவனது அனுக்கிரகத்தைப் பெற்றுப் போனகப்பெருவாழ்வெய்துவீர்களாக!

வை. கதிர்காமநாதன்,
சைவாசிரியகலாசாலை மாணவன்.

## சட்ட மறுப்போ? அடக்கு முறையோ?

### காங்கிரசின் பலத்தைக் காண்பிக்கக் காந்தியடிகளின் தீர்மானம்.

சென்றவாரத்து "யங் இந்தியா" பத்திரிகையில் ஸ்ரீமான் மகாதேவ தேசாய் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சாரம் வருமாறு:—

"தற்போதைய நிலைமையில் சர்வகட்சி மகாநாடு முறிந்து போய் விட்டதென்றே கூறவேண்டும். எவ்வித நம்பிக்கையான முடிவும் ஏற்படாதென்றே தோன்றுகிறது. ஆனால் இந்தச் சங்கடமான நிலைமை ஏற்படாதபடி உங்களிற் சில பெரியோர் முயற்சி செய்து வருகின்றனர். அவர்களுடைய முயற்சி பலியாமற் போய், மகாநாடு ஒரு குழப்பத்தில் முடிந்து விடுமேயானால், இந்தியாவில் ஆயிரக் கணக்கான பேர் துன்பத்தை ஏற்கச் சித்தமாயிருக்கின்றனர்; அடக்கு முறைக்குச் சிறிதும் பின்வாங்கார்கள். சென்ற ஆண்டில் பிரயோகிக்கப்பட்ட அடக்கு முறையைக் காட்டிலும் இது பதின்மடங்கு அதிகமாயிருக்குமென்றே தோன்றுகிறது. ஆனால் இந்த மிருகபலத்தின் பிரயோகத்தினின்று மனித சமூகம் காப்பாற்றப்படவேண்டுமென்றே நான் பிரார்த்திக்கிறேன்."

வெஸ்ட்மினிஸ்டர் பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் காந்தியடிகள் இந்தமாதிரி பேசினர். சிறுபான்மையோரெல்லோரும் சேர்ந்துகொண்டு செய்துகொண்டதாகச் சொல்லப்பட்ட ஓர் உடன்படிக்கையை மனதில் வைத்துக்கொண்டே காந்தியடிகள் இங்ஙனம் பேசினர். அரசாங்கத்தினரால் தெரிந்தெடுக்கப்பட்ட இவர்கள் இங்ஙனம் ஒருவித உடன்படிக்கைக்கு வந்து விட்டதாகச் சொல்லப்படுவது ஆச்சரியமாயிருக்கிறது. சர்தார் உஜ்ஜல்சிங் முதலியோர் இதைப்பற்றிப் பலமாகக் கண்டித்தனர். பிறருடைய சொத்தை வேறு சிலர் தாராளமாகப் பங்கிட்டுக் கொள்வதைப்போல் இருக்கிறது இஃது என்று இவர் கூறினர். காந்தியடிகளும் இதைப் பலமாகக் கண்டித்தார்.

### வேறு வழியில்லை.

சமீபத்தில் ஒரு பத்திரிகை நிருபரிடம் காந்தியடிகள் பின்வருமாறு கூறினர்:—

சர்வகட்சி மகாநாடு முறிந்துபோய் விட்டால், மீண்டும் இந்தியாவில் சட்ட மறுப்பியக்கம் தொடக்கப்படுமென்பது நிச்சயம். இதைத் தவிர வேறு வழியில்லை. இப்பொழுது நாம் கோரியதை அடையா விட்டால் பின்னர் அது தள்ளிக்கொண்டு தான் போகும். அதிக நம்பிக்கைக்கு இடமில்லையாயினும், கடைசி சமயத்தில் கூட ஒரு பரிகாரம் ஏற்படாதென்ற அவநம்பிக்கையையும் நான் கொள்ளவில்லை. எல்லாவித முறைகளையும் கையாண்டு பார்த்து விடுவதாகவே நானும் தீர்மானித்திருக்கிறேன்.

காந்தியடிகளின் பேச்சைப் படித்தவர்கள் நம்முடைய குறிக்கோ இருக்கும் தடைகள் என்னென்ன வென்பதை உடனே தெரிந்து கொள்வர். பிரதிநிதிகளுக்குள் நடைபெறும் சம்பாஷணைகள் எந்நோக்கத்தைக் குறிக்கொண்டிருக்கின்றன வென்பதை நான் கூறவேண்டுவதில்லை. காந்தியடிகள் கூறுகிறமாதிரி நாம் மூட்டான்களாகவே நடந்துகொண்டோம். ஆனால் நம்முன் வேற்றுமைகள் ஏற்பட, அரசாங்கத்தார் எல்லா வழிகளையுஞ் செய்தனர். காங்கிரஸ் தான் தேசம்; அதுவே பெரும்பான்மையான கட்சி. மற்றக் கட்சியினரின் அபிப்பிராயங்களையெல்லாம் கேட்டுவிட்ட பிறகு, அரசாங்கத்தார், காங்கிரசுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். ஆனால், தேசத்தின் பிரதிநிதியாக இருந்து பேச காங்கிரசால் முடியவில்லைப் போலும்!

"நான் திரும்பிச் சென்று வெறுந் துன்பஞ் சகித்தலினால், காங்கிரஸ் ஒன்று தான் தேசத்தின் பிரதிநிதியாக விளங்குகிறது என்று நிரூபிக்கப் போகிறேன்"

என்று காந்தியடிகள் கூறியது ஈண்டு நினைவுக்கு வருகிறது. லண்டன் பொருளாதாரச் சங்கக் கூட்டத்தில் அடிகள் பின் வருமாறு கூறினர்:—

"இந்தியாவின் உண்மையான நிலைமையைப்பற்றிச் சிறந்த இங்கிலீஸ்காரரிடத்தும் அறியாமை குடிகொண்டிருக்கிறது. இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் ஏராளமான நன்மைகளைச் செய்து விட்டார்களென்றும், ஆனால் இந்தியர்கள் நன்றி கெட்டவர்களாயிருக்கிறார்களென்றும் அவர்கள் கருதுகிறார்கள். உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் இப்படி நினைக்கவில்லை. பொதுஜன அபிப்பிராயத்தின் பிரதிநிதிகளாயுள்ளவர்கள் கூட இப்படியே கருதுகிறார்கள்"

"நீங்கள் கூறுகிறபடி இந்தியாவில் அதிகமான வறுமை குடிகொண்டிருக்கும் பட்சத்தில் ஏன் கலகங்களும் குழப்பங்களும் உண்டாகவில்லை" யென்று காலஞ்சென்ற சுரேந்திரநாத் பானர்ஜியைச் சில பிரிட்டிஷார் கேட்டனராம். இப்பொழுதுள்ள பிரிட்டிஷாரும் அதே மனதுடையவராயிருக்கின்றனர் அஹிம்சா தர்மமுறை அவர்களுக்கு மெதுவாகவே தெரிகிறது. சென்ற வருஷத்தில் இந்தியாவில் நடைபெற்ற சம்பவங்களை விட விசேஷ சம்பவங்கள் நடைபெறவேண்டும் போலும்! இந்தியாவின் மீது அந்நிய நாட்டார் படையெடுக்க விடுவர்; உள் நாட்டுக் குழப்பங்கள் நேரிடும்' என்ற விஷயங்கள் அவர்கள் மனதில் நன்றாக ஊறியிருக்கின்றன. ஆகவே பிரிட்டிஷார் பாதுகாப்பின்றி இந்தியர்கள் வாழமுடியாதென்ற எண்ணம் சாதாரண பிரிட்டிஷாருக்கு இருக்கிறது.

### இங்கிலாந்தில் சுதேசியம்.

சாதாரணமாக, ஆங்கிலேயர் என்போர், தங்களுக்கென்று சில விசேஷ உரிமைகளை வகுத்துக்கொண்டு, ஆளப்படுவோருக்குச் சாதாரண உரிமைகளைக் கூட வழங்க மறுக்கின்றனர். இங்கிலாந்தின் எல்லாப் பாகங்களிலும், கடைகள், டிராம்கள், பஸ்கள் முதலிய எல்லா இடங்களிலும், பிறநாட்டுச் சாமான்களை விலக்கிப் பிரிட்டிஷ் சாமான்களையே வாங்குமாறு விளம்பரங்கள் செய்யப் பட்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவிலோ, சுதேசி சாமான்களை வாங்குங்கள் என்று சொன்னால், அஃது இராஜத் துரோகமாகக் கருதப்படுகிறது. தங்களுக்குள்ளேயே சண்டை போட்டிருக்கும் ஒரு சமூகத்தார், எப்படி சுதந்திரம் கேட்கலாமென்று ஒரு ஸ்திரீ, பொதுக்கூட்ட மொன்றில் கேட்டார். "சுதந்திரம் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக வேண்டாமா?" என்று அவ்வம்மையார் கம்பீரமாகக் கேட்கிறாள். ஆங்கிலேயரிடத்தில், எப்பொழுதும் தாங்கள் ஆளுஞ் சமூகத்தார் என்ற கர்வம் குடிகொண்டிருப்பது உண்டு; பல தப்பெண்ணங்கள் நிறைந்திருப்பதுண்டு. ஒரு சிறு கூட்டத்தில் காந்தியடிகள் பேசிக் கொண்டிருந்த போது, ஸ்ரீமான் ஜே டெவ்லின் என்ற ஐரிஷ் தேசபக்தர், பின்வருமாறு கூறியது கவனிக்கத் தக்கது:—'இந்திய நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்கள். ஒரு தேசத்தின் சுதந்திர உரிமையை அங்கீகரித்துக் கொள்ள எவ்வித ஆராய்ச்சியும் வேண்டியதில்லை அஃது அந்த தேசத்தின் பிறப்புரிமையாகும்" என்று கூறினார். 'எங்களுடைய உரிமை மாத்திரமல்ல; நாங்கள் செய்த தியாகத்தினால் அதைப் பெறவும் அருகராயிருக்கிறோம்" என்று காந்தியடிகள் பதில் கூறினார். ஆனால் துன்பஞ் சகித்தலென்னும் விஷயத்தில் பிரிட்டிஷார் இன்னும் அதிக பாடங் கற்றுக்கொள்ள வேண்டும் போலும்! இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஒரு சாபம் போல் இருக்கிறதென்று காந்தியடிகள் ஆயிரக் கணக்கான பிரிட்டிஷாரிடத்தில் கூறிவருகின்றனர். இதனால் பயன்விளையாமற் போகவில்லை ஆனால் இந்தப் பயன் மெதுவாகவே உண்டாகும். ஆனால் இந்தியாவில் ஏழை மக்கள் வறுமையால் வாடி மரண மடைந்து கொண்டிருக்கும் போது, பிரிட்டிஷாரிடத்தில் குடிகொண்டிருக்கும் இந்த அறியாமை வருந்தத் தக்கதாகவே இருக்கிறது. இதனாலேயே, இலட்சக் கணக்கான பேர், மெதுவாக இறந்து கொண்டிருப்பதை விட தங்களை அப்படியே தியாகஞ் செய்வது நல்லதென்று காந்தியடிகள் கூறுகிறார்.

"இந்திய ஏழை மக்களின் விடுதலையைச் சிந்தியாமல் நான் வாழமுடியாது ஆனால் நமது எதிரிகளின் இரத்தத்தால் மண்மை அசுத்தப்படுத்திக் கொள்ளக் கூடாது; சத்தியத்தில் இருந்துகூடாது இவ்விரண்டுமே எங்களுடைய சித்தனைகள் இந்தியாவிலுள்ள கிராம வாசிகளுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடாமல் நாங்கள் சிறிதும் அமைதியாயிருக்க முடியாது"

இது காந்தியடிகள் வாக்கு. —(நவசக்தி)


## ஜவாஹிறுல் முபர்ரா லேகியம்.

ஒரேவேளையில் பரீட்சைபார்க்கலாம்.

பெருமையானதுணை! அருமையான சுகம்!!

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளைப் [illegible] சஞ்சலப்படும் மனதையும் ஒரே வேளை லேகியம் சாப்பிட்டபிறகு ஆச்சரியப்படத்தக்க நரம்புகளுக்கும் பலமும் திமிரும் உண்டாக்கும்

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை ஔஷதம்.

டி லேகியத்தின் குணங்களாவன; நாடி நரம்பு தாதுக்களின் பலக்குறைவும், நான்பட்ட வெட்டைச்சூடும், தரிதஸ்கலிதமும் ஆகியவைகளையும் அடியோடு சுகப்படுத்தும். மனவாழ்க்கையில் ஓர்வித அசதியையும் மயக்கத்தைப்போலுண்டாகுங் குணங்களையும்நீக்கி தேகதிடத்தையும், மன உற்சாகத்தையுங் கொடுக்கும். சரீரத்தில் ஓடித்திரியும் பற்பல வாய்வு ரோகங்களையும், இடுப்புவலி, கைகாலசதி, ஜீரணக்குறைவு, மலச்சிக்கல் மயக்கம், ஞாபகக்குறைவு இவைகளையும், பூரணசுகப்படுத்தும் பத்தியமில்லை

20நாள் 40வேளை டப்பி 1க்கு விலை ரூ 4 00 10நாள் 20வேளை டப்பி1க்கு விலை ரூ 2 20
"மண்டை குத்தல், ஒருதலைக்கபாலநோய், தலைவலி,இவைகளுக்கு காஷி நேனன்விலை அணா 6.

K. V. வாப்பாதுரை & Co.,
பறங்கிப்பேட்டை.

(Y. 18 28-9 31 To 27-9 32) S A D. J

# Che Prudential Assurance Co., Ltd.
# புறுடன்ஷல் வீமாக்கொம்பெனி.

1930-ம் ஆண்டின் கணக்கால்

### ஆதாய நன்கொடை.

வீமாத்தீர்ந்த ஒவ்வொரு 1000ரூபாவுக்கும் பூரண ஆயுள் வீமாக்களுக்கு (Whole Life Policies) ரூபா 26/- வீதமும், தவணை குறித்த வீமாக்களுக்கு (Endowment Policies) ரூபா 23/- வீதமும் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு வருஷமும் இத்தகைய பெரும் தொகையான ஆதாய நன்கொடைகளைக் கொடுக்கக்கூடியதும் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் மிகப் பெரியதுமான இக்கொம்பனியில் 2,61,00,000 பேர்கள் உரித்தாளராய்ச் சேர்ந்திருந்து மேற்கூறிய ஆதாயங்களில் பங்குபற்றிவருகிறார்கள். தாமும் அவர்களுடன் சேர்ந்து ஆதாயம் அடையவிரும்பின் விபரங்களுக்கு உடனே எழுதவும்.

டெல்மீஜ் போர்சைத் அன்ட் கோ., லிமிட்டட்.
பிரதான ஏஜண்டுகள், கொழும்பு.

Principal Agents in Ceylon, Delmege Forsyth & Co. Ltd., Colombo.
(Y 11. 19 to 31-12-31) வி.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S ADCHALINGAM, residing at Avanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.